ஸ்ரீ

# குமணன்

## (ஒரு தமிழ் நாடகம்.)

டசமரிய ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,

**நெ. ரா. சுப்பிரமணிய சர்மா**

எழுதியது.

மதுரைப் புஸ்தக வியாபாரி,

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

மதுரை, ஸ்ரீராமச்சந்திரவிலாசம் பிரஸில்,

பதிப்பித்தது.

ரைட்ஸ் ரிஸர்வ்டு] 1916 [விலை அணா 6.

**This Book**

*Is dedicated*

By the author

To all patrons of Tamil

**LIKE KUMANAN.**

# முகவுரை.

குமணனது கதை முதன் முதலில், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தாரால் நாடக உருவாய் நடிக்கப் பெற்றது. அதைக் கண்ணுற்றது முதல் குமண நாடகமொன்று விரித்தெழுத வேண்டுமென்றெனக்கவா வுண்டாயது. ஆகலின், 1908 ம் ஞு நான் மெட்ரிக்குலேஷன் வகுப்பிற் படிக்கையிலேயே இதனை இயற்றினேன். ஆயினும், நாடகநூல் வல்லார் இதிற் குறைகூறுவரோ என்றஞ்சி இதை வெளியிட்டேனல்லேன். இத்தகைய புத்தகங்கள் எழுதுவதிலும் புதிய மொழி பெயர்ப்புகளும், சாஸ்திரங்களும், புதிதாய் வரையவேண்டியதே எம்போலியரின் கடமையாயினும் எனதியற்றமிழ் மாணவரின் தூண்டுகோலால் தற்போது வெளியிட்டேன்.

முன் வழங்கும் கதை சிறிது மாறுபாட்டுடன் நாடகத்திற்கேற்ப இதில் வரையப் பெற்றுளது. இதிலும், நான் எழுதிய குமணன் என்னும் வசன நூலிலும் தமது குமண சரித்திரத்து அரும்பெருஞ்செய்யுட்களை எடுத்தாள உத்திரவு கொடுத்த சேற்றூர் சமஸ்தான வித்வான் ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களின் உதவி மறக்கற்பாலதன்று.

இங்ஙனம்,

சே. ரா. சுப்பிரமணிய சர்மா.

## நாடக பாத்திரங்கள்.

| | |
|---|---|
| குமணன். | கதா நாயகன். |
| அமணன். | குமணனது இளைய சகோதரன். |
| கற்பகம். | அமணன் மனைவி. |
| சுமதி. | குமணனது அமைச்சன். |
| சங்கன். சாகரன். பதுமன். | அமணனது நண்பரும். துன்மந்திரிகளும். |
| பெருந்தலைச்சாத்தனார். | ஒருபுலவர். |
| ஸ்ரீமதி. | அவரது மனைவி. |
| விசித்திரன். | விகடன். |

சாத்தனாரது புதல்வர். நகரவாசிகள். மெய்காவலர்.

ஸ்ரீ

# குமணன்

## ஒரு தமிழ் நாடகம்.

அங்கம் 1. களம் 1.

இடம்—சோலை. காலம்—மாலை.

பாத்திரங்கள்—அமணன், சங்கன், பதுமன், சாகரன், விசித்திரன்.

(குமணனின் இளையசகோதரனாகிய அமணன் தனது சோலையில உட்கார்ந்திருக்கிறான். அங்கு அவனது நண்பர்கள் வருகிறார்கள்.)

அமணன்—நண்பர்களே! வாருங்கள், உட்காருங்கள். நீங்கள் வருவதற்கேன் இவ்வளவு தாமதம்? முன்னமே வந்திருப்பீர்களென்று விரைந்து வந்தும், இதுவரை உங்களைப்பார்க்க முடியாது போயிற்றே.

சங்கன்—நாங்களும் நீங்கள் வருவதற்குச் சிறிது முன்னாதாக இங்கு வந்துவிட்டு, உங்களைக் காணமுடியாமையால், நீத்தம் நிரம்பிவரும் நதிவரை சென்று திரும்பினோம். நாங்கள் சோலையைக் கடந்ததும் நீங்கள் அடைந்தீர்கள் போலும்.

அமணன்—உங்களைக்காணாத ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகவே இருந்தது.

சங்கன்—நாங்களும் உங்களைக் காணாததால் தடக்கரைப்புறத்தே பறித்தெறியப்பெற்ற தாமரையைப்போல் வாடிவருந்தினோம்.

விசித்திரன்—சங்கனாரே! தலைவர் இல்லாமைக்குத் தடாகம் வருந்துதல் போல உங்களைக்காணாமையால் யானும் வருந்தினேன்.

சங்கன்—பதுமரே! பார்த்தீர்களா நமது விசித்திரரை: இவர் சமயமறியாமலே எப்பொழுதும் ஹாஸ்யம் பண்ணுகிறார். இவருடைய வாழ்நாள் முழுவதும் ஹாஸ்யமாகவே யன்றோ அமைந்து விட்டது.

பதுமன்—சங்கனாரே! உங்களுக்கிந்த விஷயம் இதுவரையும் தெரியாததா? அவர்குணம் எல்லாரும் அறிந்ததுதானே. பிறவிக் குணத்திற்கு நாமென்செய்யலாம்?

அமணன்—சாகரர் என்ன மௌனமாயிருக்கின்றார். மௌனியாகி விட்டாரா என்ன?

விசித்திரன்—கொழுக்கட்டைக்குரிய விநாயக சதுர்த்தியை இன்றாக்கிக்கொண்டார் போலும்.

சாகரன்—விசித்திரரே! உமக்கு எல்லோரும் ஒரே தரத்தினர் போலும். யாரையும் ஒரு நிகராகவே பேசுகின்றீரே. இவ்வாறு பேசலாமா?

விசி—ஆம்-ஆம்-ஆம்-ஆம்-

சாகரன்—விசித்திரரே! நீர் ஒரு 'ஆம்' சொன்னால் போதாதா நான்'காம்' சொல்கின்றீரே.

விசி—நீங்கள் நான்கு பேர்களல்லரோ? ஆகையாற்றான் நான்'காம்' சொன்னேன்.

சாகரன்—நும் விடை விசித்திரமாயிருக்கிறது. இவ்வாறு பேச வேண்டுமென்பதற்கு ஆதாரங்காட்டுவீரா?

விசி—நூலாதாரம் வேண்டுமோ, பேராதாரம் வேண்டுமோ?

சாகரன்—இதென்னமோ பிரம்மாண்டமாயிருக்கிறதே இருக்கட்டும். சரி. பேராதாரமே வேண்டும்.

விசி—என்பேரே அதற்காதாரம்.

சாகரன்—விசித்திரரே! சிறிது நேரம் சும்மா இரும். (அமணனைப்பார்த்து) அரசே! நீங்கள் சங்கனோரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தீர்கள். உங்கள் சம்பாஷணைக்கு இடையூறிழைக்கக் கூடாதென்றே மௌனமுற்றிருந்தேன்.

அமணன்—நண்பீர்! நீங்கள் ஏன் முன்போல் சந்தோஷமாயில்லாது கவலையுற்றார் போற் காணப்படுகின்றீர்கள்?

சாகரன்—நமது நாடே துக்க சாகரத்தி லாழ்ந்திருக்கும் பொழுது எங்களுக்கு மட்டும் எவ்வாறு சந்தோஷம் வரும்?

அமணன்—தேசத்திற்கு என்னவருத்தம் வந்தது?

சாகரன்—அந்த விஷயத்தை முன் இரண்டொரு தடவைகளில் உங்களிடத்தில் குறிப்பாய் உணர்த்தி யிருக்கின்றேன்.

சங்கன்—சாகரரே! நாம் ஏன் பெரிய இடத்துச் செய்தியைப் பற்றிப் பேசவேண்டும்?

அமணன்—நண்பர்களே! ஏன் இவ்வாறு சொல்கிறீர்கள்? தேச நன்மைக்காக எந்தவிதமான வார்த்தைகளை நீங்கள் கூறினும், அவற்றை நான் கேட்பதோடு பயனுறவும் செய்வேன் இது சத்தியம்.

சாகரன்—நமது ராஜாங்க விஷயங்கள் ஜனங்களுக்குப் பெருங் கலக்கத்தைக் கொடுக்கின்றன.

அமணன்—ஏன் இவ்வாறு சொல்கிறீர்கள்? நமது குமணன் ராஜாங்கத்தைக் குறைவற நடத்துகின்றாரே. இறைகூடச் சிறிது காலமாய் வாங்குவதில்லை. இன்னும் தர்மங்களைத் தவறாது செய்கின்றார். அவரது காலத்தில் எண்ணிறந்த சத்திரம் சாவடிகளைக் கட்டி இருக்கின்றார். நாட்டின் கல்வித் தேர்ச்சியைக் கருதியுள்ளார் ஆதலின், அதனைத்தமது இரண்டு கண்கள்போற் காத்துவருகின்றார். இன்னும் கல்விமான்களையும், சுமந்திரன்போன்ற மந்திரிகளையும் தம்வயத்து எப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறார்.

சங்கன்—சரி. எப்படியும் பொருட்செலவுதானே. எவ்விதத்திலும் அதிகப்பொருளைச் செலவிடலாகாது என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பேசினால் உத்தமமாயிருக்கும்.

குமணன்—சரி. பணத்தைச் செலவிடலாகாது என்கிறீர்கள். இவ்வுலக இன்பமும், மதிப்பும் அழியுந்தன்மையன வாதலால் இவைகட்காகச் செலவிடாதொழிதல் சரி இகத்திற் புகழையும், பரத்தில் நித்திய சுகானுபவத்தையும் ஈயும் தருமத்திற்கேனும் செலவிடல் வேண்டாவோ ?

சாகரன்—சொல்லுங்கள், மிகுதியையும் சொல்லிவிடுங்கள். பிறகு யான் சொல்லுகின்றேன்.

குமணன்—முதலிடை கடை வள்ளல்கள் இருபத்தொருவரும் தருமத்தால் வரும் இத்தகைய இன்பம் புகழ் இரண்டையும் நோக்கியன்றோ தம்பொருள் முழுமையும் செலவிட்டுப் புகழுடம்பு பெற்றார்கள். இவ்வுண்மையை அறிந்தே என் தமையனாரும் இரவலர் முதலியோருக்குப் பொருள் நல்குகின்றார்.

சாகரன்—நீங்களென்ன இவ்வாறு சொல்லத் தலைப்பட்டீர்கள்? நாமிறந்தபின் பிவ்விடத்திற்குத்தான் போகிறோமென்பது யாருக்குத்தெரியும் ? சுவர்க்கம் ஒன்றுண்டென்று கண்டவர்கள் யார் ? இத்தகைய விஷயமெல்லாம் பொருள் நலமிலாப் புலவரால் பிறர்பொருளைப் பறித்துண்ணும் நோக்கத்தோடு எழுதிவைக்கப் பட்டனவன்றோ ? இப் புன்மொழிகளையும் உண்மையென நம்பிப் பொருளைச் சேர்த்துவையாது செலவிடலாமோ ? உங்கள்மூத்தோர் ஏதோ தருமஞ் செய்ததாய்ச் செப்பினீர்களே. அவர் செய்யுந் தருமத்தின் முடிவென்ன ? தரும்ம் தருமம் என்று இருக்கும் பொருளை எல்லாம் வீணிற் செலவிட்டு விட்டு பணமே குடியிருந்த பொக்கிஷ அறையில் அதன் மணமே இல்லாது செய்து விடலாமோ ?

குமணன்—எனது மூத்தோரா அவ்வாறு வீணிற் செலவிடுகின்றவர் ? இனி அவர் விஷயத்தில் இத்தகைய சொற்களை என்பால் இயம்பாதீர்கள்.

சா—அவர்செய்யும் செலவு வீணல்லவென்று உங்கள் மனத்திற்கே தெரிந்திருந்தாற் போதும். எங்கட்கதனால் ஒன்றுமில்லை. ஆனால் பொருள்மிகவும் அருமையானது. இதைப் "பொரு ளிலார்க் கிவ்வுலகமில்" "தங்கைத்துடையார்க்கு மெவ்வூரு மூர்" "திரைகடலோடியுந் திரவியந்தேடு" "கல்லானேயானு லும் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்" என்னும் ஆன்றோர் மொழிகளே அறிவுறு த்துகின்றன. அன்றியும், கன்னன், மஹாபலி, அரிச்சந்தி ரன் முதலிய வள்ளல்கள் தருமத்திலேயே தங்கள் பொருள் முழுதையும் செலவிட்டன்றோ, ராஜ்யபதத்தைப் பூஜ்யமாக்கி னார்கள். பொருளைப் பெரிதும் ஈட்டிப் பெரும் பணக்காரர் களாய் இருப்பவர்களே இம்மகிதலத்தில் மதிக்கத்தகுந்தவர் கள். "பொருளல்லவற்றைப் பொருளாகச்செய்யும் பொரு ளல்லதில்லை பொருள்" என்றார் வள்ளுவரும். இவையெல்லாம் தாங்கள் அறியாதனவல்லவே.

அ—நீங்கள் சொல்வதில் ஒரு சிறிது சரிதான்.

ச—என்ன சாகரரே, நாம் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருந் தால் ஊருக்கெப்பொழுது புறப்படுகிறது?

அ—எவ்வூருக்குப் புறப்படப்போகிறீர்கள்?

சா—நாங்கள் ஓர் அவசர நிமித்தமாய்த் திருச்சிக்குச் செல்ல வேண்டும். அதை உங்கட்குத் தெரிவித்து விடைபெற்றுச் செல்லவந்தோம். அதிக நேரம் தாமதியாதிருக்க நேர்ந்த மைக்கு விசனிக்கின்றோம்.

அ—எப்பொழுது திரும்புவீர்கள்?

சா—இன்னும் இரண்டு நாட்களுக்குள் திரும்பிவிடுவோம்.

அ—அவ்வாறே சென்றுவாருங்கள்.

[சங்கன், பதுமன், சாகரன், விசித்திரன்—போகிறார்கள் அமணன் தனித்திருந்து ஆலோசிக்கின்றான்.]

அ—(தனக்குள்) என்ன, இவர்களெல்லோரும் ஒரே விதமாகப் பேசினார்கள்! இவர்கள் கூறியதின் உண்மைதானென்ன?

என் தமையனார் வீண்செலவு செய்பவரல்லரே. தருமத்தில் தான் அதிகமாகச் செலவிடுகின்றார். நானும் பலமுறை பார்த்திருக்கின்றேன். நண்பர்களும் அதையேதான் சொன்னார்கள். அவர் ஏன் இவ்வாறு பணத்தை மிதமிஞ்சி அழித்தல் வேண்டும்? பின்னால் வருபவன் எவ்வாறு போனாற்றானென்ன? நாமிருக்கும்வரை நன்றாய்ச் செலவழித்து விடுவோம் என்று நினைத்துளார் போலும். சீ! இனி இவ்வாறு அவர் செலவிடுவதை நான் பார்த்துக்கொண்டிருந்தால் பெருங்கேடு நேரிடும். ஆதலால் நானே நேரிற்போய் இனி இவ்வாறு செலவிடலாகாது என்று சொல்லுகிறேன். அப்பொழுதவர் சமாதானம் கூறுவர். அவர் என்ன சமாதானம் கூறினும் யான்கேளேன். எல்லாவற்றிற்கும் என் காதலியாற் சென்று யோசிக்கின்றேன்.

[போகிறான்]

## அங்கம் 1. களம் 2.

இடம் அமணனது அந்தப்புரம்.

காலம் பகல்.

பாத்திரங்கள் அமணன்,

[அமணன் வருகிறான். கற்பகவல்லி எழுந்து நமஸ்கரிக்கிறாள்.]

கற்பகம்—நாயகமே!

அமணன்—என்ன?

க—உங்களுடைய முகக்குறியும் அன்பில்லாது 'என்ன' என்று சொல்வதையும் கேட்டால், உங்களது மனத்தில் தீராக்கவலை குடிகொண் டிருப்பதாய்த் தோன்றுகின்றதே.

அ—அப்படி யொன்றும் இல்லையே.

க—எனக்கப்படித் தோன்றுகிறது.

அ—உன்னிடம் அதையேன் நவிலவேண்டும்!

க—காதலரே! என்னிடம் உண்மையான விஷயத்தைத் தெரிவிக்கலாகாதென்றே மறைத்துப் பேசுகிறீர்கள். நான் உங்களது மனைவி அன்றோ? என்று நம்மிருவர்க்கும் மணமுடிந்ததோ, அன்று முதல் நம்மிருவர் உடல்களும் வேறாயினும் உயிர் ஒன்றேயன்றோ? அரசே, நீங்கள் இனி இவ்வாறிருப்பின் நான் இனிப் பிழையேன். உண்மையை ஒளியாது வெளிவிடுங்கள்.

அ—அப்படியானாற் சொல்லுகிறேன்.

க—அவ்வாறு செய்து, என்னைக் காப்பாற்றுங்கள்.

அ—கண்மணி! உன்னிடம் ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிவித்து, உன் சம்மதத்தைப் பெற்றுப் போகத்தான் நினைக்கின்றேன்.

க—தலைவீர்! உங்களுக்குத் தெரியாத விஷயத்தை ஆலோசித்து நான் சொல்லத் தகுந்தவளா?

அ—நீ சொல்வதுண்மை. ஏனெனில் 'தையல் சொற் கேளேல்' என ஔவையாரும் கூறியுள்ளார். ஆதலால் உன்னைக் கேட்கக் கூடாதுதான்.

க—காதலரே! நான் கூறிய அறிவுடையவளல்லவென்று சொன்னேன். நீங்கள் எந்தப் பூவையின் சொல்லையும் கேட்கக் கூடாதென்றீர்கள். அதற்கு நீங்கள் ஆதாரவாகக் கூறிய பழமொழியின் அர்த்தம் நீங்கள் நினைத்தவாறன்று.

அ—பெண்களின் வார்த்தையைக் கேட்கவேண்டுமென்று ஔவையார் சொன்னார்கள் என்கின்றாயா?

க—சந்தேகமென்ன? கேட்கத்தான் சொல்லி இருக்கிறார்கள். எப்படியெனில்: "தையல் சொற் கேளேல்" "தையல்—பெண்ணினுடைய, சொல் - சொல்லை, கேள் - கேட்டுக்கொள், எல்லிறகு அதனை ஏற்றுக்கொள்" என்பது ஔவையார் கருத்தன்றோ?


MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

அ—சரி, ஔவையார் பெண்களது சொல்லைக் கேட்கவேண்டு மென்று சொன்னதற்கு நின் சொற்களே சான்றாயின. அஃ திருக்கட்டும். நான் ஒரு விஷயம் யோசித்து முடிவு செய்தி ருக்கிறேன்.

க—அஃதென்ன ?

அ—குமணன் ஏராளமாயும் அவசிய மின்றியும் பொக்கிஷத்தி லுள்ள பொருளை எல்லாம் செலவழிக்கின்றார்.

க—யார்? அரசரா? நன்குரைத்தீர்கள்.— அவரா வீண் செலவு செய்கின்றார்? நீங்களாகத்தான் இவ்வார்த்தைகளைச் சொல் லுகிறீர்களா? வேறு யாராவது சொல்லிக்கொடுத்துச் சொல் லுகின்றீர்களா? என்மீது கோபங் கொள்ளாது மறுமொழி கூற வேண்டுகின்றேன்.

அ—நான் கூறியவாறு குமணன் செய்யவில்லை என்று நினைக்கின் றாயா?

க—அவர் அவ்வாறு செய்யவே மாட்டார். அப்படியே செய்யி னும் அவர் உங்கள் மூத்தோர், தந்தைக்கு ஒப்பாவர். அவ ரைப்பூசிக்க வேண்டுமே யொழிய ஏசுதல் ஆகாது.

அ—அப்படியா ? அவர் எவ்வாறு பணத்தைச் செலவிடினும் நான் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கலாமே யொழிய வாய் திறக்க லாகாதென்கிறாயா ?

க—அவர் சன்மார்க்கத்தில் நின்று கல்வியின் கரையினைக் கண்டு, உலகுக்கே வழிகாட்டும் கவிஞருக்கும் தரித்திரர்க்கும்கல்விச் சாலைகளுக்கும் கூன்குருடு முதலாயினோர்க்கும் மற்ற ஜனங் கட்கும் வேண்டிய உதவிபுரிந்து வருவதாய் உலகம் அவரைப் புகழுகின்றதே. அது உங்களுக்குத் தெரியாததல்லவே. உங்க ளுடைய மனத்தை இவ்வாறு கெடுத்தவர்கள் யாவரோ அறி யேன்.

அ—அவர் உரிமையையேயன்றி என்னுடையதையும் வீணில் அழிக்கும்படி பார்த்துக் கொண்டிருக்கவா சொல்கின்றாய் ? உன்னை எவ்வளவோ புத்திசாலி என்றல்லவோ நினைத்திருந்

தேன். 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்ப தற்கெதிர்மறை யாகவல்லவோ நீ இருக்கின்றாய்.

க—இப்பொழுது நீங்கள் என்னசெய்ய வேண்டுமென்கிறீர்கள் ?

அ—நாளை, குமணனிடம்போய் இவ்வாறு செலவிடல் வேண்டாமென்று செப்பப்போகின்றேன்.

க—அழிந்தாலும் அவர் தருமத்தைக் கைவிடார்.

அ—அப்படி யான் சம்மதியேன். நாட்டையென்னிடம் கொடுத்துவிட்டு, அதன் பின்னர் அவர் எப்படி வேண்டுமானாலும் செய்துகொண்டு போகட்டும்.

க- இவ்வாறு உங்களைக்கேட்கும்படி தூண்டினோர்யாவர் ? அதை மட்டும் எனக்குச் சொல்லுங்கள்.

அ—குமணனின் மிதமிஞ்சிய ஈகையைப்பற்றி முன்னமே யான் யோசித்ததில்லை. இன்று என் நண்பரொடு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் கூறியதிலிருந்து குமணன் ஈகையால் கேடுறுமென்று பட்டது. அவரை அவ்வாறுசெய்தல் கூடாதென்று தடுக்குமுன் உனதபிப்பிராயத்தையும் தெரியவந்தேன்.

க—ஆஹா ! நான் எண்ணியது சரியாகவன்றோ இருக்கின்றது. என் பிராணபதி ! நீங்கள் உங்கள் நண்பர் புன்மொழியை நன்மொழியாய்க் கொண்டால் துன்பமுண்டாம். அவர்கள் கெட்ட அபிப்பிராயத்தோடு உங்களை இவ்வாறு செய்யும்படி தூண்டி இருக்கின்றார்கள்.

"மனத்தால மறுவிலரேனும் தாஞ்சேர்ந்த
இனத்தால் இகழப் படுவார்" ஆகலால்

நீங்கள் நல்லவர்களாயினும் துஷ்டசகவாசத்தால் தாழ்வடைவீர்கள், மன்னரை அரசினின்று நீக்கிவிட்டால், தங்களிஷ்டப்படி உங்களிடம் ஏதேனும் பெறலாமென் றெண்ணும் தீயவர் போதனைக்குட்படல் உங்களைப்போன்ற மேன்மக்கட்கேற்ற முறையாமோ ? வானர குலத்துதித்துத் தன தண்ணனைக்

சொல்வித்த சுக்கிரீவனைப் போலாது, உங்களைப்போன்று ராஜகுலத்துதித்த பரதனை மான, தமையனிடம் பக்தியோ டிருத்தல் அன்றோ உயர்வுதரும். குமண மன்னர் எவ்விதத்தி லும் குற்றமுடையரே யல்லர். நீங்கள் அவர்மேற் குற்றஞ் சாட்டுவதை ஒழியுங்கள்.

அ—அவர் தம்பிடம் அரசிருக்கின்றதென்று கைக்கு வந்த படியெலாம் பொருளை வாரி வாரிச் சூறையாடலாமா ?

க—'யானைக்கும் அடிசறுக்கும்.' மூத்தவர் செய்வதாகத் நீங்கள் சொல்லுமாறு வைத்துக்கொள்ளினும், அவரை நீங்கள் கீழ் மைப்படப் பேசலாகாது. அவருக்கு வந்ததாழ்வு உங்களுக் கும் வந்ததன்றோ ? நம்முடைய பல் நமது நாக்கை அறியாது கடித்துவிட்டால் அதைத்தட்டி உடைத்தெறிவார் எவருளர்? கண்மலரிற் கை பட்டிடின் கையை முறித்தெறிவார் யாவர் ? ஆகையின் மூத்தார் செய்யாதன செய்துவிடினும் அதை நீங்கள் பொறுத்தலே புகழுடையதாம்.

அ—சீ ! பேதாய், இதெல்லாம் உன்னிடம் யார்கேட்டார்கள் ?

[எழுந்திருக்கிறான்.]

க—(வருத்தமுற்றுப் பெருமூச்செறிந்து அமணனது கையைப் பிடித்துக்கொண்டு) நான் சொல்வதைச் சற்று நிதானித்துக் கேளுங்கள். கெட்டவழியிற் றலையிடவேண்டாம். நமஸ் கரிக்கின்றேன்.

[அமணன் சிறிது நின்று திகைத்துக் கோபத்தோடு போகிறான்.]

---

அங்கம் 1. களம் 3.

இடம். அரசசபை.
காலம். பகல்.
பாத்திரங்கள். குமணன், அமணன், சுமதி.

குமணன்—சுமதி ! நேற்று எனது தம்பி ஒருவிகிதம் அனுப் பினன். அவன் அதை யெழுதியதன் நோக்கம் இன்ன தெனத் தெரியவில்லை.

சுமதி—அவர் அதில் என்ன எழுதினரோ ?

கு—விசேஷமான காரியம் ஒன்றும் அதிற்காணவில்லை. ஆனால் என்னை இன்று பார்க்கவேண்டுமென எழுதியிருந்தான்.

சு—இதற்குமுன் அவர் இவ்வாறு கடிதம் எழுதியதில்லையே.

கு—இல்லை. ஆயினும், இப்போது குடிகளின் நன்மைகளிற் றலையிட்டிருப்பான். அவர்கள் விஷயமாய் ஏதேனும் பேச எண்ணுகின்றான் போலும்.

சு—பிரபு! நீங்கள் களங்கமற்றிருக்கிறீர்கள். ஆனால் இப்போது அமணனது மனநிலை எப்போதும் போலில்லை. அவர் தீய இனத்தாரோடு சிநேகம் செய்திருக்கிறதாய்த் தெரிகிறது. ஆகையால் அவரது எண்ணம் நல்வழிப்பட்டதன்று. எனவே அவர் உங்களை நல்ல எண்ணத்தோடு காண வரவில்லை.

[அமணன் வந்து கோபத்தோடு நிற்கிறான்.]

சு—அமணப் பிரபு! நீங்கள் கோபத்துடன் நிற்பதாய்த் தோன்றுகின்றதே !

அ—உங்களோடு பேசவாவது, உறவாடவாவது, நான் இங்கு வரவில்லை.

கு—தம்பி! ஏன் சுமதியை இவ்வாறு கோபித்துப் பேசுகிறாய் ? உன்னை அவர் என்ன சொன்னார் ?

அ—நீங்களிழைக்கும் இன்னல் போதாதா? இன்னும்யார் என்ன செய்யவேண்டும் ?

கு—என்னருமைத் தம்பி தானா இவ்வாறு கூறுவது ? —

அ—ஆம், உங்க ளருமைத் தம்பியே. அண்ணா, நான்சொல்வதை மிகவும் கவனித்துக் கேளுங்கள். நாம் க்ஷத்திரிய குலத்தி லுதித்தவர்கள். பரம்பரையாக வேந்தராயினோம். இனியு மவ்வாறிருக்க வேண்டுமன்றோ ?

கு—ஆம்.

அ—அப்படி யிருப்பதற்கு ஏராளமான பொருளிருந்தாற்றானே முடியும்: நீங்களவ்வாறின்றிப் பணத்தைத் திரணமாய் எண்ணிப் பாழுக்கிறைக்கலாமா? இந்திரனிடம் கற்பகச் சோலையும், சுரபியும், சிந்தாமணியும் இருத்தலாலன்றோ, அவனைத் தேவர் யாரும் வணங்குகிறார்கள்? கைலாசநாதர் கனக மலையைக் கையில் எடுத்ததாலும் பரந்தாமன் 'பணம்' உடைய பாம்பின்மேல் படுத்ததாலும் செல்வத்தின் சிறப்புத் தெள்ளிதிற் புலப்படவில்லையா? "இல்லானை யில்லாளும் வேண்டாள்; மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்." செல்லாதவன்வாயிற் சொல்." என்பதை மறக்கலாமா?

கு—அமணா! நீயேன் ஒரு நாளும் இல்லாதமாதிரி இவ்வளவு பதற்றத்துடனும் கோபத்துடனும் பேசுகிறாய்? யாவராலும் வெறுக்கத்தக்க செல்வத்தை நீ இவ்வளவு அபிமானித்துப் பேசலாகுமா? தம்பி நான் சீர்தப்பிய வழியில் ஏதேனும் செலவழிப்பதுண்டோ?

அ—நீங்கள் கிரமமாய் அழித்தாலென்ன? அக்கிரமமாய் அழித்தாலென்ன? இரப்போர்க்கும் புலவர்களுக்கும் கொடுத்தாலதுவே பொருட்செலவாகாதா?

கு—தம்பி! தானதர்மத்தாலேயே எல்லாருக்கும் பெருமை உண்டாகிற தென்பதை நீ உணராயோ? இந்திரனிடத்தில் கற்பகச் சோலையும் சுரபியும் சிந்தாமணியும் இருத்தலால் அவனுக்குப் பெருமை உண்டென்றாய். அவன் மானிடனாய் இருக்கையில் ஏராளமான பணம் செலவழித்து யாகம் செய்தமையாலன்றோ அப்பதவி பெற்றான். மேலும் அவனிடம் கற்பக முதலியன இருத்தலால் மட்டும் அவனுக்குப் பெருமையில்லை. அவைகளின் மூலம் ஈவதாலேயே அவனுக்குச் சிறப்பு உண்டாயது. பணத்தின் பெருமையை எண்ணிப் பரமன் பொன்மலையை எடுத்தானென்றாயே. அவன் உடுக்கையும் மண்டை யோடும் கொண்டிருப்பதற்கு என் புகல்வாய்? பரந்தாமன் பணமுடைமையால் பாம்பின்மேற் பள்ளிகொண்டானென்றனை. அவன் ஆலிலைமேற் றுயில்வதற் கியாது புகல்வாய்? இந்திரனுக்குச் சகல செல்வங்களையும் ஈந்தவன்

இவனாயிருக்க இவனே பணத்தை விரும்பினானென்றால் எவ்வளவு மதியீனம்! தம்பி, ஈகையால் எவர்க்கும் இடுக்கண் வாராது. இறைக்க இறைக்கவன்றோ மணற்கேணி ஊறுகிறது?

ஆ—நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் சொல்லுங்கள். பணத்தாலேயே இவ்வுலகில் எல்லாப் பெருமைகளு முண்டாகின்றன வென்பது மறுக்கத்தக்கதன்று. கொன்றை மலர்த்தரித்தோன் குபேரனது நவநிதிகளை யெண்ணியன்றோ அவனிடம் நட்புக்கொண்டான். மேலும் ஆராய்வின்றிக் கொடுப்பவன் கேட்டையே அடைவான் : வாமனனுக்கு மூன்றடி மண் ஈவதாய் இயம்பினதாலன்றோ மகாபலி உயிர்துறக்க நேர்ந்தது. கன்னனும் தன் ஈகையாலேயே இறந்தான். அரிச்சந்திரன், விசுவாமித்திரருக்கு விரும்பிக்கொடுத்த தானத்தால் தன் நாட்டையும் மனைவி மக்களையும் இழந்து, தானும் பறையனுக் கடிமைப்பட்டு மயானங் காத்தான்.

கு—ஆஹா! உன்புத்தி இவ்வாறு மாறிற்று? தம்பி! முன்செய்த பெருந்தவத்தாலன்றோ பெருஞ் செல்வத்தையும் தன்தோழமையையும் பரமசிவன் குபேரனுக்குக் கொடுத்தான். அவன் அவ்வளவு செல்வமுடையவனாயிருந்தும் அந்தகனாய் அழுங்கவில்லையா? மஹாபலி ஈகையாலேயே தான் சாந்தருவாயினும் தேவனது திருத்தாளைச் சென்னிசேர்த்திறந்தான். கன்னனும் தனது கொடைக்குணத்தால் 'முடியுந்தருவாயில்' முகுந்தன் வலியவந்து உனக்கு வேண்டும வரங்கேளென, அவன் "இல்லையென்றிரப்போர்க் கில்லையென்றியம்பா இதயமே ஈந்தருள்" கெனக்கேட்டு வரம்பெற்றான். அரிச்சந்திரன் ஈகையாலும் சத்தியத்தாலு மன்றோ தனக்குற்ற அளவிலாத் துன்பங்களிலும் நீங்கி, இம்மையிலேயே மும்மூர்த்திகளையும் சேவித்து மறுமைக்கும் வேண்டும் பயனையுமடைந்தான்?

ஆதலாலன்றோ,

"கொடையே எவர்க்கும் சீர்ப்பேருங் கொடுக்கு நெறியிற்பிறழாத
கொடையே யாருந்தன் வழியின் ஒழுகச்செய்யும் குறைதீர்ந்த
கொடையே பகையை உறவாக்கும் குலவும்பூதம் அனைத்தினையும்
கொடையே புரக்குமென் றுள்ளங் கொள்ளப் புகன்றான்" அறிவையே.

என்று கூறினர் புலவர்.

அம—"தரித்திரத்துழன்று சோற்றினுக்கலைந்து
தாடலைத் தசையற நடந்து
பெருந்தர வெம்பசியின் வருத்தமிக்கடைந்து
போதுநர் புலவரே பிழை
உரைத்தனர் நிதியை அவர்மொழி நரியோன்
றன்னுறுதற் ககப்படாக் கொம்பர்
பொருந்துந் தீங்கனியை நோக்கியேழுந்துசீப்
புளிக்குமென் றுரைத்தலேபோலும்."

இனி இப்படிப் பட்டவர்களுடைய வார்த்தைகளைப் பற்றிப் பேசவேண்டாம். இருக்கட்டும்.

"கல்லாரே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்"

என்பதும் பெரியோர் மொழிந்ததேயன்றோ? 'பணமில்லாதவன் பிணம்' என்பதால் நீங்கள் செய்யும் குறை உங்களோடு நில்லாமல் நம்முடைய சந்ததிக்கே இழிவையுண்டாக்கும் அல்லவா?

கு—நானினி அரசனாய் இருக்கும் வரை, இதுவரை இருந்தாற் போலவே இருப்பேன். தம்பி! என்னால் நமது குலத்துக் கிழிவு உண்டாகுமென்று நீ சொன்னால் அவ்வாறு ஆகாமல் நீயே இந்தப் பூபாரம் கைக்கொள்வாய்.

அ—சரி. அங்ஙனமே செய்கிறேன்.

கு—தம்பி! மிகவும் சந்தோஷம். எனக்கு உண்மைத்துணைவன் நீயே. உன்னை அருட்பெருங் குருவென்றே அநுதினமும் துதிப்பேன். இனி நான் கானமுற்றுத் தனித்திருந்து தவம் செய்வேன். அப்பயன் உன்னால் உண்டானதன்றோ? அமணா, நான் செல்லுமுன் சிலவார்த்தைகளைச் சொல்லுகிறேன்.

அ—சொல்லுங்கள்.

கு— "பலபல துயரம் பாடுறும் புலவர் பழித்தனர்
நிதியையென் றுரைத்தாய்
புலவர்என் பதற்குப் பொருளறிந் தனையேல்
புகன்றிடாய் அவர்பெயர் பூண்டே

இலகினர் தேவர் எனிலிவர் பெருமை
இசைப்பதென் யாண்டுச் சென்றாலும்
நலமிகப் பெறுவர் மன்னரிற் சிறந்தார்
நாவுரை நாட்டுவர் நாளும்''

''இரப்பவரென் றிவரை இகழ்ந்திடேல் கருணை
எய்திமேற் பதவிசேர் செம்மை
புரப்பது கருதிப் போந்தநல் லறத்தின்
புனிதரென் றெண்ணுதிபுலத்தில்
இரப்பதாற் குறையன் னவர்க்கிலை நமக்கே
ஏற்றதா முயர்மணி விலையைத்
தெரிப்பது தெரியார் மதித்திடார் எனினும்
சிறப்பதற் கன்றி மற்றுளதோ?''

இன்னும், செல்வத்தாற்சிலர் சிறந்தனர் மன்றாய். இராவணன் இறந்ததும், இந்திரன் தூர்வாசரது மலர்மாலையை அலக்ஷியம் செய்து துன்புற்றதும் செல்வச்செருக்காலன்றோ? தம்பி! பூர்வஜென்மத்திற்செய்த நல்வினைப்பயனால் இம்மையில் மிகுந்த செல்வத்தை எய்துவோம். இப்பிறப்பின் அறத்தால் இனிப்பிறக்கும் ஜன்மத்தில் பெரும்பயனைப்பெறுவோம். ஆதலால் அறமே எவற்றையும் ஈவது. வேறு எதுவும் நமக்கு உதவமாட்டா.

''இல்லறஞ்செ யில்லாளும் எணையரும் இருநிதியும்
நல்லரசும் வளநாடும் நமனார்கைப் படும்பொழுது
புல்லுமொரு துணையாகப் பொருந்துபவோ அறமொன்றே
வல்லதுணை யாயிருந்து வாட்டம்உறல் மாற்றிடுமால்.''

''அகழ்தருமண் புழுநரிநாய் அனைத்துமெதிர் பார்த்திருக்கும்
இகழுடம்பை அடைந்தவர்கள் இருக்கையிலும் இறந்தவரே;
திகழிரவி சவிநாணத் தேயமெலாம் மிகவிளங்கும்
புகழுடம்பைப் பொருந்தினவர் பொன்றுகினும் பொன்றாரே.''

இவ்வுலகை ஆண்டோர் எண்ணிறந்த மன்னர்: அவர்களில் கொடை, பொறுமை, வீரம், தயை முதலிய குணங்களை உடையோரின் பெயர்களே எல்லார்மனதிலும் உள்ளன. இக்குணங்களையெல்லாம் நீ கொண்டு மந்திரிமார் உரை சிறிதும் தள்ளாது வாழ்வாயாக. இதுகாறும் இந்த உலகுக்கு வேண்டி

னசெய்தேன். இனி அந்த உலகுக்கு வேண்டுவதை விழைவேன்.

[சுமதியைப் பார்த்து.]

மதிவல்லீர்! நீங்களிங்கிருந்து என்னிளையோனுக்கு வேண்டிய நன்மைகளை நாடிச்செய்து வாருங்கள். நான் செல்கின்றேன்.

சுமதி—அரசே! உயிர்போயின் உடல் அழியாது நிற்குமோ? இனி யானும் இங்குத் தங்கேன்.

[குமணன் முன்னும், சுமதி பின்னுமாகச் சபையினின்று நீங்குகிறார்கள்.]

அங்கம் 2. களம் 1.

இடம் மதுரையில் பெருந்தலைச்சாத்தனார் வீடு.

காலம் பகல்.

பாத்திரங்கள் பெருந்தலைச் சாத்தனார், ஸ்ரீமதி, அவரது குழந்தைகள்.

ஒரு குழந்தை—அம்மோய்! பசிக்கிறதே.

ஸ்ரீமதி—கண்மணி கொஞ்சநேரம் பொறு.

வேறொரு குழந்தை—தாயே பசி என்னைக் கொல்கிறதே. கொஞ்சம் கஞ்சி கொடுக்கிறாயா?

ஸ்ரீ—இரு. இதோ வந்துவிட்டேன்.

இன்னொரு குழந்தை—அம்மா! வா! அம்மா! கொஞ்சம் அப்பம் கொடுக்க மாட்டாயா?

ஸ்ரீ—குழந்தாய். உங்கள் அப்பா வந்தவுடன் வாங்கிக்கொடுக்கச் சொல்கிறேன்.

மற்றொருகுழந்தை—அம்மா! கொஞ்சம் சாதம்போடு; வயறு பசிக்கிதே.

ஸ்ரீ—கண்மணி! இரு. இப்பாற்றுத் தேய்த்துவிட்டு வந்து சோறிடுகிறேன்.

[குழந்தைகள் சோற்றுக்காகக் கதறிவிட்டுப் பசியால் மூர்ச்சையடைகிறார்கள்.]

ஸ்ரீ—ஆ! இப்படிப்பட்ட கஷ்டங்களை அனுபவிக்கவோ பாவிநான் இவ்வுலகிற் பிறந்தேன்! குழந்தைகள் அன்னமில்லாமல் அழவும் வாடினார்களே! ஜெகதீசா, இப்பாவத்தை நான் கண்ணுற்று வருந்த என்னதீவினை செய்தேனோ அறியேன்! இவ் வறுமையின் நிறமையால் எனது நாதரும் இவ்வுலகத்தை வெறுத்தவர்போற் காணப்படுகிறார். இம்மிடியின் கொடுமைதான் எவ்வளவு!

"தரித்திரம் மிக்கவனைப் பிணியொடுக்கிச் சரீரத்தை உலர்தரவாட்டும்;
தரித்திரம்அளவாச் சோம்பலைஎழுப்பும்; சாற்றருமுலோபத்தைமிகுக்கும்;
தரித்திரம்தலைவன் தலைவியர்க்கிடையே தடுப்பரும் கலாம்பல விளைக்கும்;
தரித்திரம்அவமா னம்பொய்பேராசை தருமிதிற்கொடியதொன் றிலையே"

இன்னும் இதன்வன்மை எத்தன்மை உடையதோ அறியேன்.

[சாத்தனார் வீட்டில் நுழைதல்]

சாத்தனார்—ஸ்ரீமதி! நீயேன் இவ்வாறு வருந்துகின்றாய்?

ஸ்ரீ—ஒருவித வருத்தமும் இல்லை. குழந்தைகள் பசியால் பதைக்கிறார்கள். கையில் என்ன கொண்டுவந்திருக்கிறீர்கள்?

சாத்—இன்று சிறிது அரிசியை ஓர் இடம் சென்று கடன் பெற்று வந்தேன். குழந்தைகள் ஏன் இவ்வாறு படுத்திருக்கிறார்கள்?

ஸ்ரீ—நமது வறுமையாற்றான். இத்தருணமே சமையல்செய்து அவர்களுடைய பசியை ஆற்றிவிடுகிறேன்.

சாத்—இன்று காய்கறி கூடக் கிடைக்கவில்லையே.

ஸ்ரீ—காய்கறி இல்லாவிட்டாலென்ன, கஞ்சியொன்றே போதும்.

சாத்—இம்மூன்று வருடகாலமாய் இம்மிடி நம்மிடம் குடிகொண்டு நலிகின்றது. என்னசெய்வோம். இதை நீக்குமாறு மறியேன். நீ ஜென்மாந்தரத்திற் செய்த தவக்குறைவால் தரித்திரனை என்னைப் பதியாய் அடைந்தாய். எல்லாம் காலகதியே.

ஸ்ரீ—என் உயிர்த்துணைவீர்! இனி இவ்வாறு கூறுவது சிறந்த வார்த்தைகளே அல்ல. நான் பூர்வ ஜென்மங்களிற்செய்த நிறைதவத்தாலன்றோ உங்களை நாதராய் அடையும் நலனுற்றேன். இவ்வுலகில் "உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா" என்பதும், புத்திமான்களுக்குத் தரித்திரம் வருமென்பதும் உங்களுக்குத்தெரியாததன்றே; இத்தத்தரித்திரம் நாளையே நம்மைவிட்டுப் பரிந்தோடினும் ஓடிடும்.

சாத்—நீ கூறுவது சரி. நான்சில நாட்களுக்குமுன் சித்திரனார் என்ற புலவரைச் சந்தித்தேன். அவர் குமணராஜனைப் பாடினதால் எண்ணிற் செல்வமும் விருதுகளும் பெற்றதாய்ச்சொற்றார்.

நான் நாளையே போய் அவ்வுத்தம மன்னரைத் தரிசித்து எனது கல்வித்திறமையைப் புலப்படுத்தி, வெகுமதி பெற்று வர விரும்புகிறேன். நீ என்ன சொல்கிறாய் பெண்மணி!

ஸ்ரீ—அவ்வாறே செய்யுங்கள்.

சாத்—சரி. நாளைக் காலையிலேயே புறப்படுகிறேன்.

---

## அங்கம் 2. களம் 2.

இடம்:—அமணனது கொலுமண்டபம்.

காலம்:—பிற்பகல்.

பாத்திரங்கள்:—அமணன், சாத்தனார், பதுமன், விசித்திரன், மெய்காவலன்.

அ—காவல! விரைவிற் சென்று எனது நண்பர் பதுமரைக் கூட்டிவா.

[காவலன்போய் பதுமரைக் கூட்டிவருதல்.]

ப—அரசே! வந்தனம்.

அ—வாரும் பதுமரே! இவண் வீற்றிரும்:—

ப—அவ்வாறே செய்கிறேன்.

[பதுமன் உட்காருகிறான்.]

அ—திருச்சி சென்று சில தினங்களிற் றிரும்புவதாய்ச் சொன்ன நமது நண்பர்கள் இதுகாறும் வந்திலர். அவரது வாராமை எனக்குப் பெருங் கவலையை விளைவிக்கின்றது. அவர் எப்போது வருவார்கள் தெரியுமா?

ப—அவர்களைப் பற்றித் தெளிவாய் எதுவுந்தெரியவில்லை. சென்று வெகு நாட்களாயினமையால் சீக்கிரம் வருவார்களென்று நம்புகிறேன்.

(சாத்தனார் மண்டபத்துள் நுழைகிறார்.)

கா—ஏ! யாரையா எங்கே போறே?

சா—குமணனைக் காணப் போகின்றோம்.

கா—நீரு யாரையா, எங்கே போறீரு என்று, குமணனைப் பார்க்கப் போறோம் என்று சொல்றீரே! நீரு எந்த ஊரு?

சா—நாமதுரையோம்! அவசர காரியமாய் வள்ளலிடம் செல்கின்றோம்.

கா—நீர் தேடிக்கிட்டு வந்த வள்ளலு இங்கே இல்லை. வந்தவழியே பார்த்துக்கிட்டுப்போம்.

சா—யாம் இந்நகர் அரசரிடம் சொல்லவிருப்பது அவசர காரியம். என்னை உட்செல்ல விடுகின்றாயா இல்லையா?

கா—(தனக்குள்) இவரைப் போகவேண்டாமென்றால், எனக்கே தீங்கு வந்தாலும் வரும். ஆதலால் இவர் போகட்டும் எனக்கென்ன (புலவரைப் பார்த்து)ஐயா! உள்ளே போங்க—ஆனா என்னைக் காட்டி கொடுத்து விடாதிங்க.

[புலவர் மண்டபத்துட் புகுந்து அமணனைப் பார்த்தல்.]

சா—ஜய ஜய விஜயீபவ ராஜராஜ ராஜகம்பீர ராஜஉத்தண்ட ராஜ மார்த்தாண்ட விஜய ராஜ ராஜ ராஜேசுவர! அமணப்பிரபு! ஆசிர்வதிக்கின்றேன்.

அ—(ஏதோ யோசித்துக் கொண்டு) நீவிர்யாவர்? எங்குற்றீர்?

வி—வாயில் வந்த மட்டும் இவர் அடித்து நொறுக்குகின்றாரே!

சா—பொன்மலர் தம்மிற் பொருந்தரி யினங்கள்
பொம்மென விம்மிப் பொருவிலிரு துவண்
டென் றளங்களித்தே இருந்திடு பொழில்சூழ்
கூடலம் பதிவாழ் பீடுறும் புலவன்;
பெருந்தலைச் சாத்தப் பெயருடையவனால்.
அம்புவி வாழும் அருந்தமிழ்ப் புலவர்
துன்பினைக் களையும் தூமதி அண்ணால்
செந்தமிழ்க் கற்றயான் தொந்தரை செய்யும்
வறுமையால் வாடிவந்தனன் நின்பால்:
நனிபொருள் கொடுத்தென் நல்குரவதனை
உன்திரு வருளால் ஓட்டிடுவாயே.

அ—(மௌனம்)

ப—இதற்குத்தானு பரிசுகேட்க வந்துவிட்டீர்? எமது அமணராஜ ரது பெருமையெல்லாம் தோன்றுமாறு பாடிப் பிறகுப் பரிசு கேளும்.

விசி—உமது பாட்டைப் பாடுங்கள் ஐயா.

சாத்—சீருலா வியகற்ப தாருவே மேருவே
தேனுவே திகழுமணியே
செய்யகோ பாலனே மாரனே சூரனே
தீமையகல் நரசிங்கமே
கூருலா வியமதிக் கும்பனே கம்பனே
கோவுரகனே ஓரியே
கூறுநன் மதியிலா தவனென்ன அவனியோர்
கூறுமோர் பெயருற்றவா
பேருலா வியஅரிச் சந்திரனே இந்திரனே
பீடுசால் தனபாலனே
பேசரும் புகழ்கொளும் கன்னனே பொன்னனே
பிறங்கிடும் எழிற்சந்திரனே
ஏருலா வியஅமண ராஜனே போஜனே
எண்ணுன்கு தருமங்களும்
இயற்றுபூப கண்ணனே நின்னையான் அண்டினேன்
எற்குநீ பரிசருள்கவே.''

ப—புலவரே, என்ன, இப்படிப்பாடினீர்?

சாத்—இதற்கென்?

ப—நல்லகவி பாடினீர். எமது ராஜரை கற்பதரு, மேரு, காமதேனு, மணி, கோபாலன் என்று பலவாறு இகழ்ந்தீரே, அவர்மரமா, மலையா, மாடா, கல்லா, மாடுமேய்க்கிறவனு சொல்லும். மாரன் என்றீரே, அவர் பரமசிவனது நெற்றிக் கண்ணுக் கிலக்காகி உருவழிந்தாரா! சூரன் என்றால் ராக்ஷசப்பய லல்லவா! எம்மரசை ராக்ஷசனென்கிறீரா? நரசிங்கன் இழிந்த வாயன். அமணன் அவ்வாறு இருக்கிறார்? கும்பம் என்றால் சட்டி. கும்பன் என்றால் சட்டிபோன்றவன். எம்மண்ணல் சட்டிபோலவா உள்ளார்? இவ்வாறுகூறும் உமக்குப் பரிசும் தரல் வேண்டுமோ?

விசி—பதுமரே! கவிராயருக்கு மரியாதை தருமுன், உமக்கு முதல் தாம்பூலம் தரவேணும்.

ப—விசித்திரரே! இன்னும் பாரும். நமது அமணனைக் கம்பன் என்றீரே, அவரைத் தடியர் என்று யாராவது கூறுவார்களா?

வி—'கம்பன்' என்றதற்குச் சரியான அர்த்தம் சொன்னீர்கள். கம்பர் எப்படி யிருந்திருப்பாரோ என்று இதுவரை எண்ணினேன். உங்கள் மொழிகளால் அவர் இப்படித் தான் இருப்பாரென்றுணர்ந்தேன்.

ப—இன்னும் கேட்பீராக விசித்திரரே! மன்னுயிர்களிற் சிறந்த நம் மன்னரைப் 'பாம்பு' என்று பொருள்பட 'உரகன்' என்றார். அவர் யாது செய்வார்?

வி—யார்தாம் என்ன செய்வார்? எல்லாவற்றிற்கும் தற்காலத்தைத் தான் சொல்லவேண்டும்.

ப—நீர் கூறியதுண்மையே. இதுவரை கூறியவற்றால் இக்கவிராயர் அமணனைக் குறிப்பாய் வைதார். இனி வெளிப்படையாகவே 'மதியிலாதவன்' என்றிழித்து விட்டார்.

வி—என்ன செய்கிறது? கல்வியிற் சிறந்த கம்பரையே ஒருவர் 'தடியர்' என்று கூறிவிட்டார்.

ப—இன்னும் உண்மையே உரைக்கவேண்டியதாயிருக்கிறது. மன்னரைக் கன்னனெனக் கூறியதால் அவர்க்கேயன்றி அவரது அன்னைக்கும் குற்றத்தைக் கற்பித்தார்.

வி—உண்மை பேசவேண்டியதாய் இருப்பதும் உங்கள் காலமே அதன் பயனை அடையவேண்டியதிருப்பதும் காவலர் காலமே.

ப—கேளும் "அமணனை" அரிச்சந்திரன், இந்திரன், சந்திரன் என்றார். அரிச்சந்திரன் பெண்டு பிள்ளைகளை அடிமைப்படுத்தி விட்டுப் பறையனுக்குள்ளாகி மயானம் காத்தான். இந்திரன் முனி பத்தினிகற்பழித்துப் பழிக்கப்பட்டான். சந்திரனோ சொல்லரிய பாவம் செய்து தேய்ந்தும் வளர்ந்தும் வருகிறான். இவ்வாறெல்லாமா நமது குலோத்துங்கர் செய்தார்? சொல்லும் விசித்திரரே!

வி—இவ்விஷயங்களெல்லாம் எனக்கெவ்வாறு தெரியும்? நம்மரசரையே வினவி அறியுங்கள்.

ப—அமணப் பிரபு! இவ்வாறு உங்களை இழித்துக்கூறும் கவிராயருக்குப் பரிசும் அளிக்க வேண்டுமா! இவ்வாறு தானே இவர்கள் குமணன் பொருளைக் கொள்ளையிட்டார்கள்.

அ—(மௌனம்)

சா—(அதிகக் கோபம் கொண்டு) நாங்கள் குமணனைக் கொன்ளையா இட் [illegible] இப்போ [illegible] னும் ஜீவகாருண்யமே [illegible] செலவை எண்ணினேம். புல்லோய்! உனது கபட சிந்தையைத் தெளிவில் தெரிந்தோம். நீர் முன்னம்பரும் எத்தகைய கேடுகளை எண்ணினும் அவற்றை மண்ணாக்குவோம். அமணராஜரே! சென்று வருகின்றோம்.

[அமணன் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன் போற் காணப்படுகிறான்.]

ப—அரசே! இப்போது என்ன யோசனை வேண்டியதிருக்கிறது? உங்களுக்குச் சம்மதமானால் இதோ போகிற மஹாவசைக் கவிராயருக்கு வேண்டியதெல்லாம் எடுத்தெறியுங்கள்.

அ—நீங்களெல்லாரும் செய்வதே சரி. தற்போது எனது மனம் ஒரு நிலை கொள்ளவில்லை.

வி—கடவுள் கிருபையால் எல்லாம் சரியாய் விடும்.

[சபை கலைதல்.]

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

அங்கம் 3. களம் 1.

இடம் சங்கனது வீட்டின் மேல் மாடி.

காலம் இரவு.

பாத்திரங்கள் சாகரன், சங்கன், பதுமன்.

[சாகரனும், சங்கனும் உட்கார்ந்திருக்கிறார்கள்.
பதுமன் அங்கு வருகிறான்.]

சா—பதுமரே! வாரும்.

ப—ஆம். நீங்கள் ஊருக்குச் சென்றவர்கள் ஏன் இவ்வளவு காலம் தாமதித்து வந்தீர்கள்?

சா—அங்கு ஒரு முக்கிய காரியமிருந்தது.

ப—அது என்ன காரியம்?

சா—அங்கு ஒரு மிட்டாதார் இருக்கிறார். அவருக்குக் குழிதோண்டிக் கொண்டிருந்தோம்.

ப—ஓஹோ! நீங்கள் ஊருக்குப் போனால் ஏதாவது ஒரு காரியம் முடியாமலா வருவீர்கள்?

சா—நமது சமஸ்தான சங்கதி எவ்வாறுளது?

ப—அன்பர்களே! நமது கோரிக்கை அநேகமாய் முடிந்து விட்டது.

சா—நீங்கள் அவ்வாறு எண்ண வேண்டாம். இன்னும் நடக்கவேண்டிய காரியங்கள் எத்தனையோ உள்ளன. குமணன் போனதால் நமக்கு ஒரு சிறிதே நன்மை யுண்டா யிருக்கும். இனி நாம் தகுந்த யோசனை செய்து குமணனையும் அமணனையும் வஞ்சகமாய்க் கொலை செய்வித்து நாட்டைக் கைப்பற்ற வேண்டும்.

ப—அதற்கென்ன செய்வதென்று எனக்குத் தோன்ற வில்லையே.

ச—அமணனது மன நிலை எப்படி இருக்கிறது?

ப—எனக்குத் தெரிந்த மட்டில் அவர் மனம் ஒரு நிலையில் இல்லை ஏதோ ஆழ்ந்த ஆலோசனையில் அகப்பட்டிருக்கிறது. ஆயி

ஆம் நானறிந்த மட்டில் அவர் சொன்ன வார்த்தைகளிலிருந்து அவர் நமது சொற்படி கேட்பாரென்று தெரிகிறது.

சா—பதுமனே! அதிருக்கட்டும். இனி நாம் நாட்டை எவ்வாறு கைக் கொள்வது?

ப—நமது நண்பர் சங்கரனே தகுந்த யுக்தி சொல்லவேண்டும். சங்கரனே! நன்றாய் ஆலோசித்துச் சொல்லுங்கள்.

ச—எனக்கு ஒரு யுக்தி தென்பட்டிருக்கிறது.

சா—என்ன, சொல்லுங்கள்.

ச—நாம், அரசர்கள் இருவரையும் கொலை செய்வித்தால் அது எப்படியும் குடிகளுக்கு வெளியாய்விடும். உடனே அவர்கள் கிளம்பி நம்மை அழித்து விடுவார்கள். நமது உயிரும் பொருளும் உடனே கெடும்.

ப—ஆம், நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே.

சா—அப்படியானால் நமக்குப் பாதகமில்லாத ஒரு வழியைத் தேடவேண்டும்.

சங்—கேளுங்கள். நாம் அமணனைச் சந்திக்கும் பொழுது குமணனைக் கொன்றொழிய அவனுடைய அரசுரிமை உனக்கு நிலையாதென்று கூறி, அமணனைக்கொண்டே குமணனைக்கொல்விக்கவேண்டும். அப்பொழுது குடிகளெல்லாம் அமணனுக்கு விரோதமாவார்கள். பிறகு அமணனை நாம் அழித்தாலும் பிரஜைகள் நமது பக்கமே இருப்பார்கள். உடனே நமதெண்ணமும் முற்றுப்பெற்றுவிடும்.

சா—ஆம். இதுவே சரியானவழி. பதுமனே! உமதபிப்பிராயமென்ன?

ப—இதுவே சரியான யுக்தி.

சா—அதற்காக இனி நாம் செய்யவேண்டிய தென்ன?

சங்—நாமிருவரும் சமயம்பார்த்துக் குமணன் படை எடுத்து வரப்போவதாகப் பிரஸ்தாபிக்கவேண்டும். அச்சமயம் படை

ஓடிவந்து குமணன் அயல்நாட்டிற்போய் இரண்டொரு அரசர்களின் உதவியோடு திரும்பிவரப்போவதாய்ச் சொல்லவேண்டும். உடனே அமணனுக்குக் கோபம்வரும், அது சமயம் பார்த்துக் குமணனுக்கு முடிவைத்தேடவேண்டும்.

பது—சரி. நமதெண்ணத்தை முடிக்க இதைப்பார்க்கிலும் சிறந்த சூழ்ச்சி வேறெதுவுமில்லை.

சா—இவ்விஷயங்களையெல்லாம் சமயம்பார்த்து அமணனிடத்தில் சங்கரரே சொல்லவேண்டும்.

சங்—நானே சொல்கிறேன்.

பது—மற்றச் சங்கதிகளை நாளை யோசித்துக்கொள்வோம்: இரவு அகாலமாய் விட்டது.

சா—நீங்கள் இருவரும் என்னில்லத்திலேயே படுத்துக்கொள்ளுங்கள்.

சங்—நாமிவ்வாறு நெருங்கிப்பழகுவதுகூட ஒருவருக்கும் தெரியக்கூடாது. ஆகலால் நாங்கள் போகின்றோம்.

சா—சரி. சென்று வாருங்கள்.

[கூட்டம் கலைகிறது.]

---

## அங்கம் 3. களம் 2.

இடம்—கற்பகத்தின் அந்தப்புரம்.

காலம்—இரவு.

பாத்திரங்கள்—அமணன், கற்பகம்.

[காதலர் கட்டிலில் சயனித்திருக்கிறார்கள். கற்பகம் திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்.]

கற்—ஐயோ! என்ன சொப்பனம் கண்டேன்! மிகவும் பயமாயிருக்கிறதே! ஆஹா! கனவிற்கண்ட பிசாசுகள் நனவிலும்

எனக்கு அச்சத்தைத் தருகின்றனவே! என்னசெய்வேன்! காதலர்கூடத் தூங்குகின்றனரே!

அ—(புலம்புகிருன்.)

க—ஆஹா! என் கண்ணாளர் என்னவோ பயந்து புலம்புகிருரே! எனக்கு அதிக அச்சம் உண்டாகின்றதே! எனதுடல் நடுங்குகின்றதே! இனி நாயகரை எழுப்பிவிடுகிறேன். பிராணபதி! ஐயோ இன்னும் எழுந்திருக்கவில்லையே! எழுந்திருங்கள்.

அ—(மௌனம்)

க—இன்னும் எழுந்திருக்கவில்லையே! என்ன செய்யப்போகிறேன். உடம்பெல்லாம் வியர்க்கிறதே! இனித் தொட்டே எழுப்புகிறேன். பிராணபதி! பிராணபதி! எழுந்திருங்கள்.

[அமணனன் புலம்புகிருன்.]

அ—நான் இனிப்பணத்தைச் சிறிதும் செலவிடேன்.

க—(உரத்துச்சொல்கிருன்) நானெழுப்புவதற்கு மறுமொழி கூருமல் என்னவோ புலம்புகிருரே!

[அமணன் திடீரென கண்திறக்கிருன்.]

அ—கண்மணி! ஏன் தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிருய்?

க—அது இருக்கட்டும். மிகவும் அயர்ந்து தூங்கினீர்களோ?

அ—ஏன் அப்படிக்கேட்கிருய்?

க—நான் திரும்பத்திரும்ப எழுப்பியும் எழுந்திருக்கவில்லையே.

அ—என்னவோ சொர்ப்பனம் கண்டேன்.

க—என்னசொர்ப்பனம் உங்களுக்குப் புலப்பம் கூட அதிகமாயிருந்ததே.

அ—எனக்கு ஒன்றும் ஞாபகமில்லை. நீயேன் துயிலாதிருக்கிருய்? உன் உடல் முழுதும் நடுங்கிப் பதறுகிறதே!

க—எனக்கு வரவரப் பயம் அதிகமாகின்றது.

அ—ஏன் பயம் உண்டாகிறது? சொல்லு.

க—சொல்லுகிறேன் சமீபத்தில் வாருங்கள்.

அ—இதோ வந்துவிட்டேன். விஷயத்தை விளங்கச்சொல்லு.

க—நான் ஒரு மகா பயங்கரமான கனவுகண்டேன். அக்கனவில் மூன்று பிசாசுகள் கன்னங்கறேலென்ற நிறத்தோடு என் முன் தோன்றின; கையில் கத்திகளை ஏந்தி நின்றன. இனி அவற்றின் முழு வர்ணனையையும் நினைப்பதென்றால் பயம் அதிகமாகின்றது. என்மனம் அஞ்சுகிறது.

அ—கனவிற்கா கலவுகிறாய்!

க—மீதமுங் கேளுங்கள்! அவைகள் உங்களைக் கொலைசெய்வதற் கான வழிகளைப்பற்றிப் பேசிக்கொண்டு கத்தியைத்தீட்டின. அச்சமயம் நான் பயந்து விழித்து உங்களை எழுப்பினேன்! நீங்களும் கொஞ்சநேரமாய் என்னவோ பித்துப்பிடித்தாற் போலிருக்கிறீர்கள். சிறிது முன்கூட என்னவோ புலம்பினீர் கள். இக்கனவால் எப்பயன்விளையுமோ தெரியவில்லையே. ஐயோ! என்னசெய்யப்போகிறேன்!

அ—காதலி! இதற்காகச் சிறிதும் வருந்தேல், கண்ணாடி நிழலிற் கண்டபணமும், கனவிற்கண்ட காகமாலையும் கணப்பொழுதும் நில்லா. இனி இவ்வாறு பைத்தியக்காரத்தனமாய் பயப் படாதே.

க—என்ன, எனக்குப் பயம் அதிகம் ஆகிறதே!

அ—நீ படுத்துத்தூங்கு. இனி நீ விழித்திருந்தால் உனக்கு நோ யுண்டாகும்.

க—நீங்கள் வேண்டுமென்றால் கண் வளருங்கள்.

அ—கண்மணி! என்ன இவ்வாறு கூறுகின்றாய்! நீ பயந்து விழித் துக்கொண்டிருக்கையில் நான் தூங்குவதானால் நான் மானிட ஜன்மம் எடுத்தவனோ! எழுந்திரு. முற்றத்தில் சந்திரிகை வெகு அழகாய்ப் பிரகாசிக்கிறது. வா, அங்குச்செல்வோம்.

[இருவரும் எழுந்துசெல்லல்.]

அங்கம் 3. களம் 3.

இடம்—அமணனது அரண்மனை.

காலம்—பகல்.

பாத்திரங்கள்—அமணன், சங்கன், சாகரன், பதுமன், நகரவாசி ஒருவன், மெய்காவலன்.

அ—என்ன இன்று என்மனம் பதறுகிறதே. சரி, என் நண்பர் வந்தால் மனம் தெளிவுறும். காவல! விரைவிற்சென்று என் நண்பர்களை அழைத்து வா.

காவலன்—மகாராசா, புத்தி இந்தா போய்க்கொண்டாந்திர்ரேன்.

[காவலன் மறைகிறான்.]

அ—(தனக்குள்) ஏன் என்புத்தி கொஞ்சகாலமாய் ஒரு நிலையில் இல்லை? ஏதோ எனக்குச் சில கெடுகுறிகளும் காணப்படுகின்றனவே! யாரோ எனக்கு நெருங்கிய உறவினருக்குக் கேடு விளையுமோ? அன்றி எனக்கே ஏதேனும் தீங்கு விளையுமோ? சமாதானமில்லாத என் மனத்தை என்மனைவியின் சொற்களும் மேன்மேலும் கலக்குகின்றன. பிரஜைகளும் வாட்டமுற்றிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. என் நண்பர்கள் வந்துதான் என்கவலைகள் ஒழியவேண்டும். சரி அதோ வருகிறார்கள்.

நண்பர்கள்—அமண மகாராஜரே! வந்தனம் செய்கின்றோம்.

அ—யாவர் வரவும் நல்வரவாகுக. உங்களைக் கண்டபொழுதே என்கவலைகள் அநேகமாய் நீங்கின.

ப—உங்கள் வார்த்தைகளால் ஏதோ கவலைகள் இருப்பனவாகச் சொன்னீர்களே. நீங்கள் கவலைப்படுவானேன். சங்கனும் சாகரரும் வந்துவிட்டார்கள். உங்கள் கவலையை ஒருநொடியில் தீர்த்துவிடுவார்கள்.

அ—ஊருக்குச்சென்ற சங்கனும் சாகரரும் இதுவரை வாராமலிருந்ததே என் கவலைக்கு முதற்காரணம்.

சங்—அரசே! உங்களிடம் கூறிச்சென்றவாறு திரும்பமுடியாமற் போயிற்று. ஆயினும் இவ்விடத்தில் குமணனிடம் நீங்கள் சென்று வீண்செலவு செய்வதைத் தடுக்க முயன்றதையும் அவர் அதற்குடன்படாமல் நாட்டை உங்களிடம் கொடுத்து விட்டுச் சென்றதையும் பதுமர் எனக்கு எழுதியிருந்தார். இருக்கட்டும். சுமதி எங்கே?

அ—அவரிருந்தால் நாட்டிற்குக் கேடுண்டாகுமென்று நீங்கள் கூறியதை எண்ணிக் குமணனோடனுப்பிவிட்டேன். இனி நீங்கள் முதல் மந்திரியாயும், சாகரர் இரண்டாவது மந்திரியாயு மிருக்கவேண்டும்.

ச—அந்தக்கவலையெல்லாம் இனி உங்களுக்கெதற்கு? நாங்கள் இருக்கிறோம். இனி நமது ராஜாங்க சம்பந்தமாய்ச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் எவையேனு மிருப்பின் ஆராய்தல் வேண்டும்.

சா—ராஜேசவரா! குமணன் காலத்திலேயே நமது காசறை வெறுமையாயிற்று. இனிநாம் காசறையை நிரப்பும்படியான வழியைத் தேடவேண்டும்

அ—அதற்குரிய காரியங்கள் எவை?

சா—இனி நமது அரண்மனைவாயிலில் தமிழ்க்கற்றவரை வரவிடலாகாது. அன்ன சத்திரங்களைக் கொஞ்சகாலத்திற்கு அடைத்துவைக்கவேண்டும். இப்போது நம்மிடம் எண்ணிறந்த சேவகர்களிருப்பதால் பணச்செலவு அதிகமாகிறது. அதிற் பலரை நிறுத்திவிடவேண்டும்.

அ—ஆம், அவ்வாறே செய்யுங்கள். இன்னும் எக்காரியம் வேண்டுமானாலும் நீங்களே நடத்த உத்திரவு கொடுக்கலாம்.

சாக—உங்கள் சொல்லுக் கிரண்டுண்டோ? (அமணன் ஒன்றும் பேசாமல் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறான். சங்கன் கண்சாடை செய்ய பதுமன் அரண்மனைக்கு வெளியே செல்கி( ன்.)

சங்—அரசே! என்ன, ஏதோ யோசித்துக்கொண்டிருக்கிறீர்களே! விஷயம் என்ன?

அ—சங்கனாரே! நான் அரசை ஒப்புக்கொண்டது முதல் எனக்கு ஒருவிதக் கவலையுண்டாயிருக்கிறது. அதிலும் என் மனைவி சில தினங்கட்கு முன் மிகவும் பயங்கரமாய்ச் சொர்ப்பனம் கண்டதாகச் சொன்னாள். அதுமுதல் என் மனம் அதிகமாய் வருந்துகிறது.

சங்—அச்சொர்ப்பனம் எப்படிப்பட்டது?

அ—மூன்று பிசாசுகள் என்னை அழிப்பதாய்ப் பேசிக்கொண்டனவாம். அந்தச் சொர்ப்பனம் கண்டது முதல் என் மனைவி மிகவும் கவலுகிறாள்; என்னதிங்கு நேரிடுமோவென்று எனக்குக் கவலை அதிகமாய் இருக்கிறது.

சங்—பிரபு! மகாராணியார்கண்ட சொர்ப்பனத்தில் ஒரு பொருள் இருக்கிறது. அந்த மூன்று பேய்களும் உங்கள் தமையனாரும், அவருக்கு உதவிசெய்ய வரும் நண்பர்களுமேதவிர வேறில்லை. இப்போது உங்கள் மூத்தோர் அயல் நாடுகளிற் சென்று வேண்டிய உதவி தேடுகிறாரென்று நான் கேள்விப்படுகிறேன். அவரே உங்களுக்குத் தீமையிழைக்க வருவாரென்று நிச்சயமாய்த் தெரிகிறது.

அ—அவர், அன்றே எங்கோ ஓடிப்போய் விட்டாரே. அவர் அரசை முழுமனதுடன் சந்தோஷமாய்க் கொடுத்து விட்டுத்தானே சென்றார்?

சங்—ஆம் அவ்வாறு செய்வதன் நோக்கம் வேறு ஒன்றாய் இருக்கும். நானும் அதைப்பற்றி யோசித்துச் சொல்லுகிறேன்.

அ—முன்னிருந்த செல்வத்தை எல்லாம் குறையாக்கி விட்டுத் திரும்பவும் என்னை வென்று நாட்டைக் கைப்பற்றுவாரோ?

சங்—ஆனால்-அவர் உண்மையிற் சென்றாரென்று நம்புகிறீர்களா? அன்று. இப்போது தான் எனக்குத் தெரிந்தது.

"பல்வகை நிதியி னூற்பொற் பளிங்கினான் மணியாற் செய்த
நல்வகை மாடத் தும்பர் நண்ணிவீற் றிருந்த செம்மல்
கல்லொடு புல்லு முள்ளுங் கருவிய கான மெய்தி
யெல்லொடு பனியும் வாட்ட வெவ்வித மிருப்ப னம்மா."

"அமைமிகு மினியவாக வடுதொழி லாளர் செய்யக்
காமமே லவைக்கந் திங்குங் கறியமு துண்ட வாயன்
அமர்தழை சருகு கந்த மரியகாய் கனியு ளைக்கள்
தமையிரு கரத்தாற் கொண்டு தான்புசித் திருப்பன் கொல்லோ.?"

"ஆகையாற் கானத் தண்ணீ ராயுணா ளளவு மங்ஙன்
சாகமா திகளை யுண்டுதண் பனி வெயிலுந் தாங்கி
பூசையாற் றவஞ்செய் வானென் றுன்னுதன் மடமைத் தாகும்
வினைசெய வேண்டு மன்றேல் வேறொரு சூழ்ச்சி வேண்டும்."

"இனியவ னென்செய் வானே யினியவ னவர்க்குந் தன்பால்
நனிபுள மகிழ்ச்சி பொங்க நட்டவர் பலர்பா னண்ணிக்
களிப்பொடு விளைந்து கூறிக் கதுவுபல் படையும் பெற்றுத்
துனிதவிர் மனத்த னாகித் தும்பை பூண்டிங்கு சேர்வான்."

[பதுமன் மெதுவாய் வந்து உட்காருகிறான்.]

அ—சங்கரரே என்ன சொன்னீர்கள்? என் புத்தி ஏதோ ஒரு விஷயத்திற் சென்று கொண்டிருந்ததால் நீங்கள் சொன்ன வற்றைக் கவனிக்கவில்லை.

ச—சகலவித இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு அரசரா யிருந்த குமணன் காட்டில் கஷ்டப்பட்டுக் கொண்டா யிருப்பார்? நாம் அவ்வாறு ஒருகாலும் எண்ணலாகாது. திடீரென நீங்கள் வந்து எதிர்த்ததால் நாட்டை விட்டுச் சென்றார். இனித் தகுந்த இருநண்பரோடு மூவராய்த் திரும்பிவந்து நாட்டைப் பெறமுயல்வார். இதுவே மகாராணியாரின் சொர்ப்பன பலன் என்று தோன்றுகிறது.

[நகர்வாசி ஒருவன் தோன்றல்.]

நக—மகாராஜா! மகாராஜா! என்ன அநியாயம் இப்படியும் காலமாச்சே!

இள—என்னடா சங்கதி?

நக—எனக்கு மெத்தப் பயமாகுதே என்ன செய்யப்போகிறேன்.

சங்—பயப்படாதே, தைரியமாயிரு நாங்களிருக்கிறோம், யாவற்றுக்கும்.

நக—உங்களுக்குத் தான் முதல்லே கேடு எண்ணினார்களே!

சங்—அதென்னடா? அதென்ன கேடடா?

நக—அது பெருங்கேடு,என்னதான் செய்யப் போறீங்களோ தெரியவில்லையே. எனக்குச் சொல்லக்கூட வருத்தமாயிருக்குதே

அ—ஓகோ! நமக்கென்ன அபாயம் நேரிட்டது?

நக—இனி இந்த ராஜ்யமே தொலைந்துபோகும்.

சங்—என்னடா சங்கதி விரைவில் உரை.

நக—மகாராசா ரெண்டு ராசாக்களைச் சேர்த்துக் கொண்டு உங்களைச் சண்டை செய்யப் போறாகளாம். எனக்குப் பயமாயிருக்கிறது.

அ—சங்கனாரே இதென்ன விபரீதம்?

சங்—புரவலீர்! பயப்பட வேண்டாம். அதற்கு வேண்டிய வழியைத் தேடிக்கொள்வோம்.

நக—என்ன செய்தாலும் முடியாதாயில்லே, பெரிய படையில்லை வருகுதாம்.

சங்—அடே! உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது?

நக—நான் மதுரைக்குப் போயிருந்தேன்! அப்பொத்தான் அங்கே பேசினாங்க.

சங்—மதுரையிலிருந்து எப்போது வந்தாய்?

நக—நேத்துத்தான்.

சங்—நீ, போ, தீங்கு வராமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

நகர்வாசி மறைதல்.

அ—நண்பீர்! இவன் சொல்வது மெய்தானா?

சங்—உண்மையே. இந்த நகர்வாசியைப் பார்த்தால் நன்றாய்ப்பேசக்கூடத் தெரியாதவனாக இருக்கிறான். புனைந்துரைக்கக் கூடி

ய புத்தியுள்ளோன் என்றும் தோன்ற வில்லை. நல்லவனாயும் காணப்படுகிறான். ஆதலால் அவனது வார்த்தையை நம்பவேண்டியதாய்த் தான் இருக்கிறது.

அ—இவன் கூறியதால் என் மனம் முன்னிலும் அதிகம் துடிக்கிறதே.

சங்—எனக்கும் அவ்வாறே தான் இருக்கிறது. ஆயினும்மனந்தளரவிடுவது அழகல்ல. ஆதலால், சில ஒற்றர்களை அனுப்பி விஷயத்தை முற்றிலும் அறிந்துவரச் செய்வோம்.

அ—அனுப்புங்கள் விரைவில். குமணன் இவ்வாறுமா செய்யத்துணிந்தார்!

சங்—இம்மட்டுமா செய்வார்? கடைசிவரைப் பாருங்கள். அவர் உயிரோடிருக்கும் வரை உங்களுக்குக் கேடுதான் விளையும்.

சா—அவரை மறுவுலகிற் கனுப்பிவிட்டால்?

சங்—அப்புறம் அரசனுக்குக் கவலைக்கிடமில்லை.

சா—இனி நாம் செய்யவேண்டிய காரிய மென்ன?

அ—எனக்கொன்றுந் தோன்றவில்லை. சங்கனும் நீங்களுமே சொல்லுங்கள்.

சங்—எனக்கென்ன தோன்றுகிறது? நமது சேனையைச் சித்தம் செய்யவேண்டும். இனி யொரு காரியமு மிருக்கிறது.

அ—அதையும் சொல்லும்.

சங்—அது துரோகச் செயலாயினும், குமணன் செய்ய எண்ணும் தீமையினும் பெரிய துரோக மன்று. குமணன், நண்பரோடு இங்குற்று உங்களைக் கொன்று மறுபடியும் அரசாள்வார். அவர் காலத்திற்குள் நாடுவறுமை யுறப் பகைவ ரதனைக் கைப்பற்றுவர்.

அ—முற்றிலும் உண்மை.

சங்—நீங்களும் உங்கள் வம்சமும் சுகமுற்று வாழவேண்டு மானால் குமணனைக் கோறல் வேண்டும்.

அ—நீங்கள் எனக்குக் கெடுதியையா சொல்வீர்கள்? நீங்கள் செய்வது எனக்கும் சம்மதம்.

சங்—குமணன் றலையைக் கொண்டுவருவோர்க்குக் கோடிப் பொன்னளிப்பதாய்ப் பறையறை விப்போமா?

அ—சரி.

சா—நாளையே அவ்வாறு செய்து விடுவோம்.

[எல்லோரும் செல்கின்றனர்.]

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

## அங்கம் 4. களம் 1.

இடம்:—குமணபுரியின்புறம்.

காலம்:—மாலை.

பாத்திரங்கள்:—நகர்வாசிகள் பலர் பெருந்தலைச் சாத்தனர்.

[நகர்வாசிகளின் கூட்டத்தில் சாத்தனரும் இருக்கிறார்.]

முதல்நகர்வாசி—ஐயா! எவ்வளவு அநியாயம் நம்நகரில் நடக்கிறது! நேற்றைய திருவிழாவிற்குக் குமணன் இருந்திருப்பாராளுல் அது எவ்வளவு சிறப்பாய் நடந்திருக்கும்!

இரண்டாமவன்—அவர் எத்தனை இரவலரை இறைவலர் ஆக்குவார். எத்தனைகவிராயர் பரிசுபெறுவர். கோயிலில் அன்னதானமும் சொன்னதானமும் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!

மூன்றுமவன்—அதெல்லா மிருக்கட்டும். இவற்றிற்கெல்லாம் அவரது பக்தியும் கல்வியும் புலவரைப்போற்றும் புலமையும் கல்வியைக் கற்போர்க்கு உதவுதலின் களிப்புமன்றே காரணம். இந்த அமணன் திருவிழாவில் செலவழிக்கக்கூடிய பணத்தை எல்லாம் சேர்த்துவைப்பதோடு தானதருமங்களை எல்லாம் நிறுத்திவிட்டார். எத்தனை பள்ளிக்கூடங்கள் அநியாயமாய் இவரால் மூடப்பட்டன.

நான்காமவன்—அவர் என்னசெய்வார். எல்லாம் அவருடைய சிநேகராகிய குடிகேடர் தாம் செய்கிருர்கள். அவர்களே தருமங்களை நிறுத்தினர். சில தினங்களுக்கு முன் யாரோ மதுரையிலிருந்து ஒரு கவிராயர் வந்தாராம். அவருக்குப், பாழாகும் அந்தப் பதுமன், அரசனை, ஒன்றும் கொடுக்கவொட்டாமற் செய்தானும். அப்புலவர் மிகவும் வருத்தமுற்றுப் போனராம்.

இரண்டாமவன்—அவர் நம்மிடமிருந்து எதுவும் கொள்ளையிடாமலிருந்தாற் போதாதா? குமணன் பிக்ஷாதிபதிகளை லக்ஷாதிபதிகள் ஆக்கினர். அமணன் லக்ஷாதிபதிகளை எல்லாம்

பிக்ஷாதிபதிகளாக்கினார். ஏழைகளுக்குங்கூட இவரால் ஏற்பட்டிருக்கும் வரி எவ்வளவப்பா?

நான்காமவன்—நான்தான் அப்போதே சொன்னேனே. இவையெல்லாம் அவருடைய நண்பரின் செய்கையேயன்றி வேறல்ல.

முதலவன்—நீ சொல்கிறது நன்றாயிருக்கிறது. சொல்லுகிறவன் சொன்னால் கேட்பவன் மதி எங்குற்றது?

நான்காமவன்—"கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையாதா?"

மூன்றாமவன்—அதெல்லா மிருக்கட்டும். குமணவள்ளல் தமிழ்ப்புலவரைக்கொண்டு எத்தனை பிரபந்தங்களைப் பாடுவித்தார். அவர்களைத் தமது உயிர்போலவன்றோ காப்பாற்றினார். அக்காலத்துச் சேரசோழ பாண்டியர்கள் தமிழைக் காப்பாற்றினார்கள். நமது மூத்த அரசரோ அம்மூவரும் ஒருவரேபோல உதித்திருந்தார். இன்னும் பொதுவாய் ஈகையை நோக்கில அக்காலத்து வள்ளல் என்பார் இவர் முன் பின் மினிமேய ஆவர். ஆனால் அவருடைய தம்பி அமணனோ செய்யக்கூடாத அநீதிகள் செய்கிறார். இதற்கு நாம் என்ன செய்யலாம். இத்தகைய "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்று"ன்றோ?

சாத்தனார்—நீவிர் எல்லாருங்கூடி அவருடைய துஷ்ட சிநேகரினின்று பிரித்துவிடக் கூடாதா?

முதலவன்—அச்சோ! எங்களுயிரை உடனே உயர்லோகம் அனுப்பி விடுவார்கள் அந்தப்பாபிகள்.

சாத்தன்—அப்புறம் அவர்கள் உயிர் நிற்கும்படி நீங்கள் விடுவீர்களோ?

முதலவன்—இந்த ஊராரெல்லாரும் குமணனுடைய ஈகையைக் கண்டவர்கள். அவர்களுடைய சன்மார்க்கத்தையும், பக்தியையும், குடிகளுக்குச் செய்திருக்கும் நன்மையையும் கண்டிருப்பார்கள். இந்நகரின் வெளியிலுள்ளவர்கள் அவ்வாறறிவார்களா?

ஐந்தாமவன்—நீங்கள் ஒன்றும் தெரியாதவர்கள் போற் காணப்படுகிறீர்கள். நான்கு தினங்கட்கு முன் வெளியூர்களில் அரசன் அறைவித்த முரசைக்கேட்ட பிரஜைகள் என்ன நிலையடைந்தார்கள் தெரியுமா?

"நிதியிழந்தோ மென்பர்சிலர் நெடியசிர மசைத்திசைக்குந்
துதியிழந்தோ மென்பர்சிலர் சொற்கடலிற் றுளைந்தறியும்
மதியிழந்தோ மென்பர்சிலர் மனமறுகி வாணரெலாம்
பதியிழந்து வனநோக்கிப் பார்வேந்தன் படர்பொழுதே."

"மானிடர்தந் துயர்கருதான் வழக்குரைத்தா லெதிர்பகரான்
தானிடரே நிதம்புரிவான் றனக்கொன்றோர் விதிவகுப்பான்
தேனெனவே மொழிபகர்வான் சிந்தைசெயல் விடமனையான்
ஈனவர சாட்சியினு மெழுநரக மினிதாமே."

"என்றுமில் லாதோர் நெஞ்சி னின்பமே யினைத்தென்றென்னார்
துன்றிய பெருஞ்செல்வத்திற் றோன்றினர் வறிஞராயில்
சென்றன மகிழ்ச்சியெல்லாஞ் சிந்தையை வாள்போற்றாக்கக்
கன்றுத லன்றியுள்ளங் களிப்பது காணற்பாற்றோ."

இவ்வாறு தனித்தனியே சொல்கிறார்கள். நமது புறநகர் வாசிகள் குமணனது சிறப்பை நன்குணர்ந்திருக்கின்றார்கள்.

சாத்தனார்—நான்கு தினங்கட்குமுன் அமணன் என்ன முரசறைவித்தான்.

ஐந்தாமவன்—உங்களுக்கெல்லாம் இன்னும் தெரியாதா?

முதலவன்—என்ன, சொல்லு.

இரண்டாமவன்—விரைவிற்சொல்லு.

ஐந்தாமவன்—குமணன் தலையைக் கொண்டுவருவோர்க்குக் கோடிப்பொன் தருவதாய் அறையப்பட்டது அறியீர்களோ?

சாத்—என்ன? அப்படியா?

இரண்டாமவன்—அப்படிச் சொன்னவனைக் குத்துங்கள்

பலர்—அமணனைச் சித்திரவதை செய்யுங்கள்.

நான்காமவன்—அவரைச்சொல்லக் குற்றமில்லை. அவரது தீய நண்பரைக் கொல்லுங்கள்.

மூன்றுமவன்—இவர் இப்போது சொன்னது மெய்தானோ?

ஐந்தாமவன்—நான் பொய்யாசொல்கிறேன்.

மூன்றுமவன்—அப்படியானால் குமணபுரியில் அறைவித்த அப்பறை எங்கள் காதில் கேட்கவில்லையே.

ஆறுமவன்—முதலில் புறவூர்களில் தெரிவித்துவிட்டுப் பிறகு தலைநகரில் வெளிப்படுத்தப் போகிறூர்களாம்.

மூன்றுமவன்—இதெல்லாம் உனக் கெவ்வாறு தெரிந்தது?

ஆறுமவன்—நான் நேற்று இரத்தின வியாபாரத்தின் பொருட்டு சுற்றுப் பக்கங்களிற் போயிருக்கும்போ திவ்விடயங்களைக் கேள்வியுற்று இங்கோடிவந்தேன்.

மூன்றுமவன்—ஆனால் நமது வள்ளலைக் கொன்று விடுவார்கள்?

ஆறுமவன்—நல்லவர்கள் ஒன்றும் செய்யார்கள். ஆனால் உலகில் எல்லாரும் நல்லவர்களா யிருக்கிறூர்களா?

சாத்—குமணனிப்போ தெங்கிருக்கிறூர்?

ஆறுமவன்—அவர் தற்போது சண்பகவனத்தில் தனித்திருக்கின்றூராம். எந்நேரமும் கடவுளைத் தியானித்துக் கொண்டிருப்பார்போலும்.

முதலவன்—இருக்கட்டும். இன்று நம் தியாகராஜப்பெருமாள் கோயில் வீதியில் எழுந்தருளுவார். அவரைக் தரிசித்து நம்மன்னருக்கு எவ்விதத் துன்பு முண்டாகாதவாறு துதிப்போம்.

இரண்டாமவன்—நாளை நாம் யாவரும் ஒரு பொதுக் கூட்டங் கூடி அதில் விஷயங்களை முடித்துக்கொள்வோம்.

மூன்றுமவன்—அவ்வாறே கட்டாயம் செய்வோம்.

[எல்லாரும் போதலும், சாத்தனூர்மட்டும் தனித்திருத்தலும்.]

சாத்—ஆஹா! மகாகனம் தங்கிய குமணனது தலையையும் தொலைக்கவன்றோ பதுமனுதியர் எண்ணிவிட்டார்கள். இருக்கட்

டும். இத்தகைய விஷயம் அவருக்குத் தெரியாது போதும். நானென் னூருக்குப் போகுமுன் வள்ளலார் சிலராகிய குமண னைக்கண்டு இப்பாதகரின் தீய எண்ணங்களைத் தெரிவிப்ப தோடு, கூடுமானால் எனது வறியநிலையை அவரிடம் அறி வித்துச்செல்வேன். எவ்வாறேனும் அவரது உயிரைக்காப் பாற்றுவேன். எல்லாவற்றிற்கும் ஒருயுக்தி தோன்றுகிறது. அவ்வாறே செய்கின்றேன்.

[செல்கின்றார்.]

## அங்கம் 4. களம் 2.

இடம்—சண்பகவனம்.

காலம்—மாலை.

பாத்திரங்கள்—குமணன், சாத்தனார்.

[குமணன் உட்கார்ந்திருக்கிறான். சாத்தனார் அவனைப் பார்க்கிறார்.]

சாத்—(தனக்குள்) இதுவே சண்பகவன மென்கின்றார்கள். இதோ உட்கார்ந் திருப்பவரே குமணவள்ளலா யிருக்கவேண்டும். இவரது அறிவும், சாந்தமும், குளிர்ந்த பார்வையும் முகத்தி லே ததும்புகின்றன. ஆகா! இவர்மேலன்றோ அப் பாபி அடாப்பழி சுமத்த ஆரம்பித்தான்.

[சமீபத்திற் செல்கிறார்.]

கும—ஐயீர்! இத்தனிக் கானகத்துக்குச் செல்லும் நீங்கள் யார் என யானறியலாமோ?

சாத்—யான் பெருந்தலைச்சாத்தன் என்னும் பெயரினன்.

கும—ஐயீர்! ஈங்குற்றவாறென்னை?

சாத்—குமணனைத் தேடிவந்தேன்.

கும—ஆகா மிகவும் சந்தோஷம். நீங்கள் தேடிச்செல்லும் குமணன் யானே. நீங்கள் என்னைத்தேடிவந்த தெதற்கோவென அறிய அவாவினேன்.

அகவல்.

சாத்—அரசே! எங்கள் அருந்தமிழ் அண்ணால்!
தரித்திர மென்பாற் றரித்துள தென்றன்
அகத்துறுமக்க ளன்னமில்லாமலே
மிகத்துன்புற்று மென்மைத் தாயின்
முகத்தைநோக்க மோயும்என் முகம்
திகைத்துநோக்கச் சென்றனன் நின்பால்
ஆதலின் வறுமையை அகற்றுதிவள்ளால்.

கும—புலவீர்! நானரசனாக விருந்த அந்த நாள் வாராது இந்த நாள் வந்து நொந்தெனை அடைந்திராயினும் உங்கள் வறுமையை என் உயிர்ச்செலவினாலேனும் தீர்க்கவேண்டியது என் கடமை. கவியரசே! என்றலையைக் கொண்டுவருவோர்க்கு என்றம்பி கோடிப்பொருள் கொடுப்பதாய்ச் சிலநாட்களுக்கு முன் பறைசாற்றியதாய் மாந்தர் சிலர் வழுத்தினர். ஆதலால் என்றலையைக் கொண்டுபோய்த் தம்பி கைக்கொடுத்து அதன் விலையை வாங்கி, உங்கள் வறுமை நோயைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

கண்ணிகள.

['வீடலால' என்ற தேவாரப்பண்.]

சாத்—கொலைமறுந்த றன்னையன்றோ குணமிக்கோர் தம்நூல்களில்,
நிலைபெறவே நாட்டினார்கள் நீரறிந்த தல்லவோ.

கும—வாழ்வுதன்னில் விருப்புளோரை மாய்த்தல்பெரும் பாவமாம்
தாழ்மையான உலகவாழ்க்கை தகர்த்தஎன்னைக் கைக்கொள்வீர்

சாத்—வள்ளலும்மைக்கண்டவுடன் வளமையுற்றேன் வண்மையாய்!
கொள்ளையாகப் பணமுங்கொண்டேன் கூவிறையே போகிறேன்.

கும—தெள்ளறிவீரென்மொழியில் தீமையில்லை தேறுவீர்
கள்ளர்கொள்ளும் இத்தலையைக் காவலன்முன் கொண்டுபோம்.

புலவீர்! இவ்வாறு செய்யின் மூன்றுவிதங்களில் நன்மையுண்டாம். முதலில் உங்கள் வறுமைதீரும். பிறகு என் தம்பியின் மனக்கவலை மாறும். எனக்கும் முக்தி சித்திக்கும்.

[சாத்தனார் சிறிதுநேரம் ஏதோ யோசிக்கின்றார்.]

சாத்—அரசே! நீங்கள் கூறுவது உண்மைதானா?

கும—பெரியீர்! குமணனை அஃதியன் என்றெண்ணினீர்களா? இதோ தலையைக்கொடுத்தேன்; கைக்கொள்வீர்.

[உடைவாளை உயர்த்தல்]

சாத்—போதும்! போதும்! இன்று முதல் உங்கள் தலை எனக்கே உரிமையானதன்றோ?

கும—ஆம், ஆம்.

சாத்—நீங்கள் கேள்வியுற்ற விஷயம் உண்மையாவென்று உங்களூர் அணுகி விசாரித்துவந்து, சிறிதுநேரத்தில் தலையைக்கொண்டு போகிறேன். அதுவரை எனக்குரித்தான இத்தலையை உங்களிடம் அடைக்கலமாக வைத்துச் செல்லுகிறேன். கள்வர் முதலிய துஷ்டர் அதைக்கவர்ந்து கொள்ளாமற் காத்துக் கொள்ளுங்கள்.

கும—அவ்வாறே செய்கிறேன். விரைவில் வாருங்கள்.

சாத்—நான் தனிவழி செல்லவேண்டியிருக்கிறது. தற்காப்புக்காக உங்கள் உடைவாளைச் சற்றீயுங்கள்.

கும—தந்தேன். பெற்றுக்கொள்ளுங்கள்.

[குமணன் வாளைக் கொடுக்கப் புலவன் பெற்று மறைகிறான்.]

## அங்கம் 4. களம் 3.

இடம் அமணனது அரண்மனை.

காலம் காலை.

பாத்திரங்கள் அமணன். சாத்தனார், காவலன், சங்கன், பதுமன், நகர்வாசிகள்.

சா—ஓ காவலா!

கா—(இடமொன) யாரையா? சில தினங்களுக்கு முன் வந்துபோன புலவரா? வாங்க, வாங்க.

சா—உங்கள் அரசனிடம் சென்று எனது வரவைத் தெரிவி.

கா—போதும் உங்கள் சங்கதியைச் சொன்னால் எனக்கு நல்ல மதியாதை கிடைக்கும், போமையா வேலையத்தவரே.

சா—அடே! முன்போல் வந்திருப்பதாய் எண்ணாதே. தற்போது உன்னரசனுக்கு ஒரு நன்மைசெய்ய வந்திருக்கிறேன். அதற்கென்னைச் செல்லவிடுகிறாயா இல்லையா?

(சேவகன் உள்ளே போகிறான்.)

கா—மகாராஜ்! சில தினங்களுக்கு முன்னாலே வந்திருந்தாரே, அந்தப் புலவரு வந்திருக்கிறாரு.

சங்—என்னடா! என்னசங்கதி சொல்ல வந்தாய்? இவ்வாறுவரும் வீணர்களை, வரவிடக்கூடாதென்று, நான் முன்னமே உனக்குச் சொல்லவில்லையா?

கா—புத்தி, இன்னும் கொஞ்சூண்டு சொல்லிப் போடுறேன் அவர்—அவர் நம்ப மகாராசாக்கு என்னமோ நன்மை செய்ய வந்திருக்காரும்.

அ—சங்கனாரே! அவர் நமக்கேதேனும் நன்மைபுரிய வந்திருக்கலாம். ஆதலால் அவர் வரட்டும் (காவலனைப்பார்த்து) அவரை விரைவில் வரவிடு.

[காவலன் வெளிச் செல்லுகிறான்.]

கா—ஐயா! உங்க காட்டிலே மழே பெஞ்சருச்சு. உள்ளே போய் மாராசாவைப் பாக்கலாம்.

[சாத்தனார் உட்செல்கிறார்.]

சா—அமணப்பிரபு! வந்தனம்.

அ—எங்கு வந்தீர் புலவீர்?

சா—உங்கள் சன்னிதானத்தில் வெகுமானம் பெற்றுப்போக வந்தேன்.

சங்—ஏ பித்தப்பிடித்த புலவரே! உமக்கு எதற்காக வெகுமானம் கொடுக்கவேண்டும்?

சா—நீங்கள் விரும்புவதும், ஒருவராலும் செய்ய முடியாததுமான காரியத்தைச் செய்து முடித்து வந்திருக்கின்றேன்.

சங்—என்ன ஐயா! உம்முடைய பாஷை எனக்கொன்றும் விளங்கவில்லையே, ஒருவராலும் செய்ய முடியாத காரியம் யாது? அதை எவ்வாறு செய்து முடித்தீர்?

சா—குமணராஜனின் தலையைக் கொய்பவர்க்குக் கோடிப்பொன் கொடுப்பதாய் ஏற்பாடுண்டன்றோ?

சங்—ஆம்.

சா—நான் அவ்வாறு செய்திருந்தால்?

சங்—உமக்கும் நிச்சயமாய் அது உண்டு.

சா—சரி, அக்காரியத்தைச் செய்து முடித்திருக்கிறேன்,

சங்—பேஷ், பேஷ், நல்ல காரியம் செய்தீர். இப்போது வெகுமதி கேளும் அரசர் கொடுப்பார். ஆனால் நீர் செய்ததற்கு யார் சாட்சி இருக்கிறார்கள்?

[குமணனது தலையைத் திறந்து காட்டுகிறார்.]

சா—மந்திரிகளே! அமண மகாராஜரே! இது தான் குமணன் தலை. நன்றாய்ப் பாருங்கள். இந்த வாளைப்பாருங்கள். இதைக் கொண்டே அவரைச் சிதைத்தேன். இன்னம் இரத்தம் சொட்டிக்கொண்டே இருக்கிறது பார்த்தீர்களா?

[அமணன் அதைக் கண்டதும் சிறிது நேரம் திகைத்து விம்மி விம்மிப் பெருமூச்செறிந்து கீழே விழுந்து புலம்புகிறான்.]

அ—ஐயோ! ஐயோ! மூடனாகிய யான் என்ன காரியம் செய்தேன். சண்டாளன் என்ன செய்தேன், அண்ணலே, இனி என்ன செய்வேன். ஐயோ! அண்ணா! என்னை அநாதையாக்கினீர்களே! உங்களை இனி எங்ஙனம் காண்பேன். உடன் பிறவியின் உயிர் வாங்கவோ கொடியேன் உலகிற் பிறந்தேன்; என துயிர்த்துணையே! ஆருயிர் அன்பே! அறத்தின் பெருந்துணையே! சாம்போது என்னென்ன எண்ணினீர்களோ! உன் தம்பியே கேடு எண்ணினதால் இனி இவ்வுலகில் இருக்க

வேண்டாமென்று இறந்தீர்களோ? தம்பியினும் கொடியர் தரணியில் இலர் என வருந்தியிறந்தீர்களோ! ஆகா நீங்கள் இறந்ததைக்கண்டும் என்னுயிர் இன்னும் நீங்கவில்லையே. அண்ணா! அண்ணா! என் மனம் என்னை வதைக்கின்றதே! என்ன செய்வேன்! எவ்வாறு சகிப்பேன்! முடியாது முடியாது! சகோதரத்துரோகம் செய்த பாவியாகிய நான் இவ்வுலகில் இருப்பதே இதற்கோர் பாரம். இதோ நீங்கள் சென்றவிடத்திற்கு வந்து விடுகிறேன்.

(வாளை உயர்த்துகிறான்)

சா—ஏ அமணா! போதும், போதும். இப்படியெல்லாம் செய்தால் உமது பழி நீங்கிவிடுமோ? உமது பொருள் வேட்கையன்றோ அவரது மரணத்திற்குக் காரணம் ஏன் இவ்வளவு பாசாங்கு செய்கிறீர்.

அ—புலவரே! இனி என்னை எவ்வாறு நிந்திப்பினும் அதை நான் பெறப் பொருத்தமுள்ளவனே. இனி என் உயிரை இழிஞனாகிய நான் ஒரு க்ஷணமும் வைத்திரேன்.

(கத்தியால் தன்னைக் குத்திக்கொள்ள அதை உயர்த்துதல்)

சா—அரசே! நில்லும் நில்லும். உண்மையிற் குமணனின் மரணத்திற்காக வருந்துகின்றீரா?

அ—சத்தியமாய்ச் சொல்லுகிறேன். இனிக்குமணனைக் காணாமல் உயிர் தரியேன்.

சா—இவ்வார்த்தை உண்மையானால் குமணனுக்கு உயிர்வரச் செய்வோம். எம்மால் செய்ய முடியாதது இவ்வுலகிலேதுவுமின்று.

“பட்டமா மரந்தழைக்கப் பாடுவோம் இதுவென் முன்னே
நட்டதோர் கல்வேருன்றி நளிர்தளிர் விளைமீக் கொண்டு
சொட்டு தேங்கனிக ளீயச்சொல்லுவோம்அரிதென்றொன்றும்
விட்டிலோம் எதுவும் செய்வோம் மேலவர் நம்மின்யாரே.”

(அமணன் புலவரது பாதங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றான்.)

அ—என் அமயனை எழுப்பித் தந்தால் நீங்களே குரு, நீங்களே என் இஷ்ட தெய்வம்.

சாத்—அரசே! இங்கே இரும். யான் காடடைந்து இத்தலை குமணனது வெட்டுண்ட உடலிலொட்டவும் அன்னோர் திரும்பவும் உயிர் பெறும்படியும் பாடித்திரும்புகிறேன்.

அ—"எனதுடல் உயிர்பொன்சுற்றம் எய்தியவாழ்வோடெல்லாம்
உனதெனப் புரிந்தயாணிற் குருற்றமோர் கைம்மாறுண்டோ
அனதுற வெண்ணிலென்போ லறிவிலாரில்லை ஈசன்
இனமருள் புரிதற்கியாரே செய்குவர் கைம்மாறையா"
என்னண்ணனைச் சீக்கிரம்போய் எழுப்புங்கள், எழுப்புங்கள்.

சாத்—சரி; வருந்தாதிருங்கள். சென்று விரைவில் வருகின்றேன்.

[சாத்தனார் செல்கின்றார்]

அ—அடே காவலா! அந்த ராஜத்ரோகிகள் என்முன்னே வரட்டும்.

[சங்கன், சாகரன், பதுமன் வருதல்.]

சா—அரசே வந்தனம். எங்களை யழைப்பித்த காரணம் யாது?

அ—ஏ பாபிகளே! விடத்தையொத்த கொடியர்களே! சண்டாளர்களே! பரமத்துரோகிகளே! அடுத்துக்கெடுக்கும் மடையர்களே! என் புத்தியைக்கலக்கிய புல்லர்களே! நீர் இனி எனதுநாட்டில் இருத்தல் கூடாது. இங்கு நீங்கள் இருந்தாலும் இவ்விடத்திற்கு மாசுண்டாகும்.

[காவலனைப் பார்த்து]

காவல! இவர்களை விரைவில் வெளியேற்று.

[சிறிதுநேரத்திற் சாத்தனார் வருகிறார்.]

சாத்—அமணராஜரே! சமீபத்திலிருக்கும் சண்பகவனத்திற் சென்று குமணராஜரைக் கண்டுகொள்ளுங்கள்.

அ—இனி உங்களை எவ்வாறு புகழ்வதென்று தெரியவில்லையே. மேதகையீர்! நீங்கள் காட்டிற்கு என்னோடுவந்து என் மூத்தோரைக் காட்டுவதோடு அவரைத் திரும்பவும் நாட்டிற்குக் கூட்டிவந்து முடிபுனைவித்தல் வேண்டும். இன்றேல் யானுயிர் தரியேன். இக்குடிகளும் அவ்வண்ணமே.

சாத்—ஆகா! பிரஜைகள் எவ்வளவு பிரலாபிக்கிறார்கள்: எல்லோரும் புறப்படுங்கள். குமணனை யான் காட்டுகிறேன்.

[எல்லோரும் புறப்படுகிறார்கள்.]

அங்கம் 5. களம் 1.

இடம்—காடு.

காலம்—பிற்பகல்.

பாத்திரங்கள்—அமணன், குமணன், சாத்தனார், நகரவாசிகள் [குமணனைச் சாத்தனார் காட்ட அவனைத் தழுவிக்கொண்ட அமணன் சிறிது நேரம் பேசாமலிருந்து பிறகு பேசுதல்]

அ—அண்ணா! என்னைத் தயை கூர்ந்து மன்னித்தருள்க.

"தெரியாமல் சிறியோர்கள் செய்தபிழை யத்தனையும் [யோய்
பெரியோர்கள் பொறுப்பதுவே பெருந்தகையாம் பெருந்தகை
அரியானும் பேர[redacted]யில் அருகியொரு புன்தலைய
நரியானும் பான்மையலே நானிருந்து கோண்டத்தம்"

என் அண்ணா! அருமை அண்ணா!

[பேச முடியாமல் நிற்கிறான்.]

கு—தம்பி! ஏன் இவ்வாறு சொல்கிறாய்!

அ—அண்ணா! கேளுங்கள். நான் செய்த பிழையைப் பொறுத்தருளி அற்ப மதியால் யான் செய்த அபசாரத்தை எண்ணாது நாடேற்று அதை ஆளாவிட்டால் நான் இங்கேயே இறந்து படுவேன்.

கு—அமணா! விலங்கொடித்து வந்தவன் அதைத் திரும்பவும் கொள்வனோ? நலமிகு அமுதமுண்டோர் நன்றில்லா நஞ்சுண்பாரோ? நீ எனக்கு எப்பிழையும் இயற்றினை என்றெண்ணிலேன். நீ நாடேற்றுக் கோல் கோடாது ஆட்சிபுரிவாயாக.

அ—நமஸ்கரிக்கிறேன், அண்ணா! நீங்களே அரசாளவேண்டும். சுமதியே மந்திரியாக வேண்டும். உங்களிருவர் இஷ்டப்படியே செய்தாற்றான் எனக்கு நலமுண்டாகும். தியர் நட்பால் மனமழிந்து சீரிழந்தேன். சிறிது முன்னரே என் தவறுணர்ந்தேன். இப்போது எனது மனம் [illegible]மெழுகு போல்


... U. SWAMINATHAIYAR LIBRARY

உருகுகின்றது! இச்சமயம் காப்பாற்றுவிட்டால் நான் உய்யேன்,—

கு—தம்பி! இனி இவ்வாறு என்னிடம் பேசுவது ஏற்றசெயலன்று.

அ—புலவீர்! எனது அண்ணனை நாடுறச் செய்வதோடு அவரை அரியணையிலும் அமரச் செய்தருளவேண்டும். இக்காரியம் உங்களாலன்றிப் பிறரால் ஆகாது. ஆதலால் தயை கூரவேண்டும்.

சா—அவ்வாறே செய்கிறேன். (குமணனைப் பார்த்து குமணராஜரே! சிறியர் இவ்வாறு மறுகுவதால் நீங்கள் அரசராதலே தகுந்த காரியம்.

கு—பாவலீர்! இனி நான் அவ்வாறு செய்யேன். உடலினின்று நீங்கிய உயிர் அதிற்றிரும்பவும் சாருமோ?

சா—எனக்காகவாவது இளையோரைக் காப்பாற்றுங்கள்.

கு—நற்பதவியை விடுத்துத் தாழ் நிலையுற யாரே சம்மதிப்பார்?

சா—அரசே! நன்று செப்பினீர்கள்.

"நின்றலை யென்றலையாக நினக்கென்ன சுதந்தரமென்?
என்றலையின் முடிபுனைய நான்கருதிற் றடையுளதோ?
பொன்றலையிற் புகழ்மௌலிப் பொன்றலையாய் மறுத்துரைத்தல்
என்றலைநீ கற்றறிவ ணெவரிடத்திலெனப்" புகல்வாய்.

முன்னே, உமது தலை எனது என்னச் சொன்னீர்களே. அம்மொழியை மறந்தீர்களே! உங்கள் தலை எனது பொருளாயின் அதன் மேல் நான் முடிசூட்ட என்ன தடையுளது?

கு—(தனக்குள்) ஆஹா! இனி என்ன செய்வேன். வலியவன்றோ நானே புலவர் வலையிற் சிக்கினேன்! மீறபடியும் நாடு செல்லவன்றோ நேர்ந்தது. இருக்கட்டும் தேவர் அனையர் புலவர்! என்றது இவர்களுக்கு நனிபொருந்தும் பொருந்தும். மேதாவிகளையும் மருளச் செய்யும் இன்னோர் தந்திரம் அம்மம்ம! எத்தன்மைத்து!

[புலவரை நோக்கி.]

பெரியீர்! நீங்கள் இப்போது செய்த யுக்தி ஒருவனைச் சிறையில் வைப்பதை ஒப்பது. கடவுளைப் போன்ற உங்கள் சொல்லை மறுத்துப் பேசவும் மனந்துணியவில்லை. என் செய்வேன்.

அ—நன்றே இந்நாள். இன்றே நன்னாள்.

குடி—அரசே! உங்களை அரசாக்குவதால் இப்புலவர், எங்களுக்கும், அமணனுக்கும் உயிர்ப் பிச்சை கொடுத்தனர்.

சா—சரி யாவரும் புறப்படுங்கள். நாம் நண்ணுவோம்.

குடி—இதோ புறப்பட்டோம்.

(நகர் நோக்கி யாவரும் செல்லல்.)

## அங்கம் 4. களம் 2.

இடம்—கொலுமண்டபம்.

காலம்—மாலை.

பாத்திரங்கள்—குமணன், அமணன், சாத்தன், நகரவாசிகள், மெய்காவலன்.

[பிரஜைகள் எல்லாம் நிறைந்தும், மங்கள வாத்தியவொலி நிறைந்துமிருக்கும் கொலுமண்டபத்தில், சாத்தனார், குமணன் அமணன் முதலியோரைக் கூட்டிக்கொண்டு கொலுமண்டபம் அடைகிறார்.]

சா—குமணவள்ளால்! இவ்வரியணையிலமருக.

கு—புலவீர்! மன்னியுங்கள். நானிக்கசரிலேயே இருக்கிறேன். என் தம்பியே அரசாளுக.

அ—அண்ணா! இன்னும் இவ்வாறு கூறலாமா?

குடிகள்—எம்மண்ணலே! எங்கள் திருப்திக்காகவாவது நீங்கள் அரசுபுரிய மன்றாடுகிறோம்.

சா—பெருந்தகையீர்! முகூர்த்தநாழிகை தவறுகிறது. சீக்கிரமணைமேலேறும்.

[குமணன் ஏறி உட்காருகிறான்.]

அ—காவல! விரைவிற்சென்று நமது சுமதியாரை அழைத்துவா.

காவலன்—பிரபு! இதோ அழைத்துவருகிறேன்.

[சென்றவன் திரும்பிவந்து.]

அரசே! இதோ மந்திரியார் வந்துவிட்டார்.

சுமதி—அரசே! வந்தனம். பெரியீர்! வந்தனம்.

அ—சுமதியாரே! உங்களுக்கு யான் மிகவும் அபசாரம் செய்துவிட்டேன். அதற்காக எனக்கு என்னதண்டனை கொடுப்பதானாலும் பெறத்தக்கவன்.

சுமதி—அரசே! நீங்கள் எனக்கு எவ்விதத்தீங்கும் செய்யவில்லை. அப்படி ஏதேனும் செய்திருப்பினும் அதனால் எனக்கு மனவருத்தமுமில்லை.

சா—அதெல்லாம் அப்புறம் பேசிக்கொள்வோம். முடிசூட்டும் முகூர்த்தநாழிகை வந்துவிட்டது.

சுமதி—சரி. அவ்வாறே முதலிற் செய்யுங்கள்.

[அமணன் கிரீடம் உயர்த்திச் சாத்தனார் கையிற்கொடுக்க, அவர் குமணனது தலையிற் புனைகிறார். பிறகு குமணனையும், அமணனையும், சாத்தனார் கவிகள்கூறி வாழ்த்துகிறார்.]

சாத்—திருவளரும் காவலர்கள் முறையாக இறைகொடுக்கத் தெண்ணீராடைப்
பெருவுலகின் மானிடர்கள் நன்மையுற வளங்களெலாம் பெருகித்தோன்ற
மருவுதமிழ்ப் புலவரெலாம் நனிவாழ இன்பமுறும் வண்மைசான்ற
தருவைநிகர் குமணனொடு தம்பியனையோர்களெலாம் தழைத்துவாழி.

"உடலுயிர்போல் மணியொளிபோல் இருவர்மனம் ஒன்றேயாகிப்
சடலினிடை அணைவகுத்த ராகவனும் பரதனுமுன் கருத்தொன்றாகி
புடவிபுரந் திருப்பரிவர் போலிவண உலகமெலாம் புகன்றுபோற்ற
நெடியவனும் இளையானும் உளமகிழ்ந்து புவிபுரக்க நெடுகொள்மன்னே.

[அமணன், புலவரை நமஸ்கரித்து அவரைநோக்கி.]

அ—தேடரிய என் குலகுருநாதரே! நீங்கள் செய்த பேருதவிக்கு எனதுடல் பொருளாவி என்னும் இம்மூன்றுமேயன்றி இவ்வுலகையே உவந்தீயினும் அது ஈடாமோ!

சா—யான் கைம்மாறு பெறுவேனெனக் கருதினீர்களோ?

அ—அன்று, ஆயினும் நான்தரும் இப்பொருள்களையேனும் என் மேல் அன்பு கூர்ந்து அங்கீகரித்தருளவேண்டுகிறேன்.

[தங்கத்தகட்டில் நவரத்நங்களையும் எராளமான கனகத்தையும் கொடுத்துப் பல விருதுகளையும் கொடுக்கிறான்.]

சுமதி—அமணராஜரே! இன்றேனும் பெரியோர் பெருமை உணர்ந்தீரன்றோ?

அ—அமைச்சர் சிகாமணியே! நன்குணர்ந்தேன். அவர்கள் இவ்வுலகை நல்வழிப்படுத்துபவர். நமது சிறப்பெல்லாம் அன்னோர் திருவாய்மொழிகளே.

சுமதி—(சாத்தனைப்பார்த்து) கவிச் சக்கரவர்த்தியாரே! நீங்கள் வள்ளலது தலையைக் கொணர்ந்ததைக் கேள்வியுற்றேன். ஆனால் அதன் மருமம் யாதென யான் அறியலாமா?

சா—சுமதியாரே! எல்லாரும் என்னென்னவோ கேட்க நீங்கள் மட்டும் இதை வினவினீர்கள். யானதைக் குறிப்பாய் உணர்த்துகிறேன்.

சுமதி—அவ்வாறே செய்தருளுங்கள்.

சா—மாந்தை நகர் வாழும் சிற்பியொருவனைக் கண்டு அவனிடம் இரண்டு வடுக்களிருப்பனவாய்க் கூறினேன். அவன் அவற்றை எவை யென்று கேட்க, நான்,

“போற்று சீராளும்மன்னர் புனைமுடி பட்டுப்பட்ட
காற்றழும் பொன்றுழ்வாணர் கருதிய பொருள்களெல்லாம்
மாற்றிலா தளித்துக்கையில் வருந்தழும் பொன்றும்” காண்பாய்.

என்றேன். அவன் அதற்குப் பரிசாக யான் வேண்டிய பொருளீந்தான். அதுவே யான் எடுத்துவந்த குமணனது தலை. தற்போது உங்கள் வினவிற்கு விடைவந்ததன்றோ?

கு—அறிந்தேன் புலவீர். இதுவும் உங்கள் பெருமையை நன்கு ணர்த்துகிறது. இனி நாம் செய்வன யாவுள.

சா—இத்தகைய நற்சம்பவங்களுக் கெல்லாம் வழிகாட்டிய எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுவோமாக.

(எல்லாரும் எழுந்து கைகூப்பி நின்று சொல்லல்)

"பதியே யெம்பரனே யெம்பரம்பரனே யெமது
பராபரனே யானந்தப் பதந்தரு மெய்ஞ்ஞான
நிதியே மெய்ந்நிறையே மெய்ந்நிலையே மெய்யின்ப
நிருத்தமிடுந் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியே யென்கண்ணே யென்கண்மணியே யெனது
கருத்தே யென்கருத்தி லுற்றகனியே செங்கனியே
துதியே யென்துரையே யென்குருவே யென்னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகாமணியே."

"திருவே யென்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே யென்னுறவே யென்னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற
கருவே யென்கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே."

குமண நாடக முற்றிற்று.

அங்கம் 1. களம் 1. நீத்தம் - வெள்ளம். தடக்கரை - குளக்கரை. ஹாஸ்யம்-சிரிப்பு. மௌனி - பேசாதவன். கொழுக்கட்டை - சிற்றுணவு வகையிலொன்று. பிரம்மாண்டம் - பெரிது. துக்கசாகரம் - வருத்தக்கடல். இறை - வரி. தம்வயம் - தம்மிடம். இகம் - இவ்வுலகம். பரம் - மேலுலகம். ஆன்றோர் - அறிவுடையோர். கைத்து - கையிலுள்ளபொருள். திரை - அலை. ஈட்டி - சேர்த்து. மகிதலம் - பூமி.

அங்கம் 1. களம் 2. நவில - சொல்ல. தையல், பூவை - பெண். மறுவிலர் - குற்றமற்றவர். போலாது - ஒவ்வாமல். மான - ஒப்ப. பட்டிடின் - பட்டால். பேதாய் - அறிவற்றவளே.

அங்கம் 1. களம் 3. விகிதம் - கடிதம. தீய இனத்தார - கெட்டவர். இன்னல் - துன்பம். பணம் - பாம்பின்படம். கேணி - கிணறு. கொன்றைமலர் தரித்தோன் - பரமசிவன். முகுந்தன் - விஷ்ணு. தாட்டுணை - இரண்டுகால்கள். பேதுனர் - மயக்கமுறுவோர். இலகினர் - விளங்கினர். நமன் - இயமன. இரவி - சூரியன். சவி - ஒளி. பொன்று - சா.

களம் 2. அங்கம் 1 உலோபம் - கஞ்சததனம. கலாம் - கலகம். மிடி - தரித்திரம்.

களம் 2. அங்கம் 2. இறால் - தேன்கூடு. நல்குரவு - தரித்திரம்.

அங்கம் 3. களம் 1. உம்பர் - மேலிடம். செம்மல் - அரசன். கனலிய - நெருங்கிய. எல் - சூரியன். கந்திக்கும் - வாசனைசெய்யும். சாகம் - இலை. ஓகை - சந்தோஷம். துனி - மிக்க கோபம்.

அங்கம் 4. களம் 1. சொன்னம் - தங்கம். வள்ளல் - தரித்திரர்க்குக் கணக்கில்லாமல் கொடுப்பவன். வாணர் - அரசனைப் [illegible]

அங்கம் 4. களம் 2. மோய் - தாய். வழுத்தினர் - சொன்னோர்கள். நாட்டினோர் - எழுதினர். தகர்த்த - தொலைத்த. கூவிறை - அரசன்.

அங்கம் 5. களம் 1. பெருந்தகை - பெருந்தன்மை. அரியாளும் பேரணை - சிங்காசனம். புன்மை - கேவலம். அபசாரம் - குற்றம். கோடாது - கோணாமல். கனல் - நெருப்பு. ஏற்ற செயலன்று - தக்ககாரியமல்ல. சாருமோ - சேருமோ. தாழ்கிலை - தாழ்வில்லாமை. செப்புதல் - சொல்லல். மௌலி - கிரீடம். சிறை - ஜெயில்.

அங்கம் 5. களம் 2. தரு - கற்பக விருக்ஷம். புடவி - பூமி நெடியவன் - தலைமையன். வினாவினோர்கள் - கேட்டோர்கள். வடு - தழும்பு யாவுள - எவையிருக்கின்றன. வல்வினைநோய் - நல்வினைதீவினைத் துன்பங்கள். அமரர் - தேவர். ஏறே - ஆண்சிங்கத்தை யொத்தவனே.

அரும்பதவுரை முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY